Registered in Ceylon as a Newspaper

சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது வைகாசி 17 ஆம் நாள் துல்ஹஜ் 25 (30-5-62) புதன்கிழமை இதழ் 108

Jegajothi TOOTH POWDER
SEGAR & Co., MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

# துப்பாக்கி 'லைசன்ஸ்'

## பெருமளவில் ரத்து?

## ஆனால் கட்டணம் செலுத்துமாறு காரியாதிகாரி உத்தரவு

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாணத்தில் பெரும்பாலானவர்களின் துப்பாக்கி லைசன்ஸ்களை ரத்துச் செய்வதற்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. 'லைசன்ஸ்' கட்டணம் செலுத்தப்பட்ட பின்னரே 'லைசன்ஸ்கள்' ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறதாம்.**

யாழ்ப்பாணத்தில் 50 வீதமானவர்களுக்கு அதிகமானோரது துப்பாக்கி லைசென்ஸ்கள் ரத்துச்செய்யப்படவிருப்பதாகத் தெரிகிறது. இதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. ஆனால் வருடாந்த துப்பாக்கி லைசென்ஸ் கட்டணத்தை செலுத்துமாறு காரியாதிகாரிகளிடம் இருந்து கிடைத்த அறிவித்தல்படி கட்டணப் பணத்தைப்பலர் செலுத்தி பின்னரே லைசென்ஸ் ரத்துச் செய்யப்பட்ட உத்தரவு தெரிவிக்கப்படுவதாகத் தெரிகிறது. இதனால் துப்பாக்கிச் சொந்தக்காரர் பெரிதும் கஷ்டப்படுவதாகவும், இதுபற்றி எம். பி. க்களுக்கு புகார் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உரிய அதிகாரிகளின் சிபார்சின்படி வழங்கப்பட்ட இந்த துப்பாக்கி லைசென்ஸ்கள் திடீரென ரத்துச் செய்யப்படுவது சம்பந்தமாக உள்நாட்டு மந்திரியிடம் உடனே நடவடிக்கை எடுக்கக் கோரப்படலாமெனவும் பார்லிமெண்டில் இது விஷயம் எழுப்பப்படலாமெனவும் தெரியவருகிறது.

உரிய காலத்தில் லைசென்ஸ் கட்டணம் செலுத்தத் தவறினால் குற்றப்பணமும் அறவிடப்படவிருப்பதாகவும் இவற்றைச் செலுத்தி கச்சேரிக்குச் சென்றால் அங்கு துப்பாக்கி லைசென்ஸ் ரத்துச் செய்யப்பட்டதாக உத்தரவிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறதாம். இதனால் பலர் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டியுள்ளது. லைசென்ஸ் ரத்துச் செய்யப்பட்டது சம்பந்தமாக காரியாதிகாரிகளுக்கு எதுவித அறிவித்தலும் செய்யப்படாமல் இருப்பதே இக்குழப்ப நிலைக்குக் காரணமெனத் தெரிகிறது.

அவசரகால நிலைமையின் போது துப்பாக்கிகள் அதன் சொந்தக்காரரிடமிருந்து பறிமுதல்செய்யப்பட்டன. இதைத் தொடர்ந்து அவ்வப்பகுதி பொலிஸ் நிலையங்கள் மூலம் துப்பாக்கிச் சொந்தக்காரர் பற்றிய அறிக்கைகள் பெறப்பட்டு உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன்ட் மூலம் அவைகள் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டதாகவும் அதன்படியே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக வும் தெரிகிறது.

## உடுவில் எம்; பி. இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைப் பார்லிமெண்ட் பிரதிநிதிகள் கோஷ்டியில் ரஷ்யாவுக்குச் சென்றிருந்த உடுவில் எம். . திரு. வி. தர்மலிங்கம் தமது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியுள்ளார். இன்று யாழ்தேவிமூலம் இவர் யாழ்ப்பாணம் வந்துசேருவார்.

## தேசிய கல்வி மசோதா

### சமர்ப்பிப்பதில் தாமதம்

### கல்விக் கமிஷன் அறிக்கை இன்னும் தயாரில்லை

கொழும்பு, செல்வாய்

கல்வி அமைப்பில் புதிய மாற்றங்களைக் கொண்டு வர இருக்கும் தேசிய கல்வி மசோதாவை பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

கல்விக் கமிஷன் தனது முடிவு அறிக்கையை இன்னும் சமர்ப்பிக்காததனாலேயே இந்த நிலை ஏறபட்டுள்ளது.

தாங்கள் எதிர்பார்த்தது போல தமது முடிவு அறிக்கை இம்மாத முடிவில் முடிவடையாதென கல்வி மந்திரிக்கு கல்விக் கமிஷன் தலைவர் அறிவித்துள்ளார்.

நாலுமாதத்தில்அறிக்கையை சமர்ப்பிக்கும்படி தான் வேண்டியும் 15 மாதங்களான பிறகு இன்னும் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என மந்திரி தெரிவித்தார்.

## ராதாகிருஷ்ணன்

சென்னை, மே 29

தமிழ்நாடு வந்திருந்த இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இன்று புதுடில்லி திரும்பினார்.

## சதித்திட்ட குற்றப் பத்திரிகைகள் தயாராகின்றன

### வழக்கு ஆரம்ப தேதி நிச்சயப்படுத்தப் படவில்லை

கொழும்பு, செவ்வாய்

சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டதாக சந்தேகத்தின் பேரில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 28 பேருக்கான குற்றச்சாட்டுப் பத்திரங்கள் அவர்கள் காவலில் இருக்கும் பொழுதே வழங்கப்படும் என்று நீதி அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். குற்றச்சாட்டுப் பத்திரங்களை சந்தேகிக்கப்பட்டவர்களுக்குக் காலதாமதமின்றி நேரத்துடன் வழங்குவதற்காக அட்டோர்னி ஜெனரல் இலாகா தீவிரமாக வேலை செய்துவருகிறது.

ஜூன்மாதம் 7-ம் திகதி விசாரணை நடைபெறுமென்று நிச்சயமாக இன்னும் முடிவு செய்யப்படவில்லை யென்றும், ஆனால் குறிப்பிட்ட திகதியில் விசாரணையை நடத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று நீதியமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வழமையாக விசாரணை ஆரம்பமாகும். இருவாரகாலத்துக்கு முன்னரே குற்றச்சாட்டுப்பத்திரங்கள் வழங்கப்படும்

## வவனியா பௌத்த கோவில் திறப்புவிழா

### தமிழ்நாடு முதன் மந்திரி காமராஜரை அழைக்க முடிவு

வவனியா, திங்கள்

வவனியாவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள குணனந்த மடம், பௌத்த கோவில் ஆகியவைகளின் திறப்பு விழா அடுத்த மாதம் 27ந் திகதி நடைபெறவிருக்கிறது.

பௌத்த கோவிலில் உள்ள புத்தர், விஷ்ணு, முருகன், விநாயகர் ஆகிய திருவுருவச் சிலைகளின் கண்திறப்பு விழாவுக்கு தமிழ் நாடு முதல் மந்திரி திரு. கே. காமராஜரையும், சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. சு. நடேசபிள்ளை ஆகியோரையும் அழைப்பதென கோவில் திறப்பு விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ், சிங்களப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## 36 லட்சம் கலன் பெட்ரோல் விற்பனை

கொழும்பு, செவ்வாய்

ஒரு மாதத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் 36 லட்சம் கலன் பெற்ரோல் உற்பத்திப் பொருட்களை இது வரை விற்றிருக்கிறது. இதற்குக் கிடைத்த தொகை ரூ 43,00,000 ஆகும் இத்தொகையில் 35 லட்சம் ரூபாய் பெறுமான பெற்றோல் வாடிக்கைக்காரர்களுக்கு விற்கப்பட்டது மிகுதி 8 லட்சம் ரூபாய் பெறுமானவை அரசாங்க இலாகாக்களின் உபயோகத்துக்கான வையாகும்.

## அனல் காற்று

புதுடில்லி, மே 29

அலகாபாத்தில் அனல் காற்று வீசுவதாக அறிவிக்கப்பட்டது.

## ஈச்மனின் அப்பீல் நிராகரிப்பு

ஜெருஸலம், மே 29

லட்சக்கணக்கான யூதர்களைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஐந்து மாதங்களுக்கு முன்னர் மரணதண்டனை விதிக்கப்பட்ட அடோல்ப் ஈச்மனின் அப்பீலை இஸ்ரேல் உயர் நீதிமன்றம் இன்று நிராகரித்தது.

இஸ்ரேல் ஜனாதிபதி மன்னிப்பளிக்காவிடில் ஈச்மன் தூக்கிலிடப்படுவார்.

## வல்வெட்டித்துறையில் மந்திரி

கொழும்பு, செவ்வாய்

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. மகாநாம சமரவீரா ஜூன் மாதம் முதலாம் திகதி வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்யவிருக்கிறார். அத்தருணத்தில் மந்திரி வல்வெட்டித்துறை சிவன்கோவிலில் வீதியைத் திறந்துவைப்பார்.

## வெளிநாட்டவர்கள் பணம் கொண்டுவருவதற்குத் தடை

### குறிப்பிட்ட தொகையே அனுமதிக்கப் படுவர்

கொழும்பு, செவ்வாய்

இலங்கைக்கு கொண்டு வரப்படும்வெளி நாட்டுப்பணம் கள்ள மார்க்கட்டிலோ அன்றேல் அனுமதி பெறாதவர்களுக்கோ கொடுக்காமற் தடை செய்யும் பொருட்டு செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரிகளும், சுங்க இலாகா அதிகாரிகளும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்கள். வெளி நாட்டவர் இலங்கைக்கு கொண்டு வரும் பண விபரங்கள் ஒரு புதிய பத்திரத்தில் குறிப்பிட வேண்டுமென இவ் அதிகாரிகள் வேண்டியுள்ளார்கள்.

வெளிநாட்டவர்கள் 'ஸ்ரேலிங்' பணத்தில் 10 பவுண் பெறுமதியுள்ள தொகையே கொண்டு வரலாம். இல்லாவிடில் இதற்குச் சமமான இலங்கை, இந்திய அல்லது பாகிஸ்தான் பணத்தில் 100 ரூபாவிற்கு மேற்படாமல் கொண்டு வர இவர்கள் அனுமதிக்கப் படுவார்கள்.

குறிப்பிட்ட தொகையிலும் பார்க்க கூடிய தொகை பணத்தை இவர்கள் கொண்டு வந்தால் அப் பணம் பறிமுதல் செய்யப்படும்.

## வரி விளம்பரம்

### தேவை

" வெயிட்டேர்ஸ் " (Waiters) 25வயதுக்கு மேற்படாதவர்கள் தேவை. எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும்.

டில்க்கா ஐஸ்கிறீம் கோ,
202, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### தேவை

ஐஸ்பழம், ஐஸ்கிறீம் தெருவில் கொண்டு சயிக்கிள் மூலம் விற்பனை செய்வதற்கு பையன்கள் தேவை.

டில்க்கா ஐஸ்கிறீம் கோ,
202, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்

அடைவு நகை ஏலவிற்பனவு

தொல்புரம் இ. துரையப்பா அன்சன்ஸ்அவர்களின் அடைவு கடையில் 24-9-58 முதல் 31-12-60 வரையில் அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை 9-6-1962 திகதி சனிக்கிழமை முற்பகல் 8 மணி முதல் மேற்படி கடையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
வெந்தீஸ் மேஸ்தர்.

சித்தங்கேணி,
7-5-1962.

### விசேஷ அறிவித்தல்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி இலக்கம் 4, கண்டிறேட்டிலிருக்கும் யாழ்நகர் கஷ்ட நிவாரண பாதுகாப்புச் சங்கம் லிமிட்டெட்டிலிருந்து இதுவரை இருநன்கொடைகளைப் பெற்றேன்.

பொது ஜனங்களுக்காக உதவி செய்யும் சங்கங்களில் இச்சங்கம்தான் இலங்கையில் முதன்மை வாய்ந்ததென்றும் நேர்மையுள்ளதெனவும் வெளியரங்கப்படுத்தி இச்சங்கத்தில் எம்மைப் போன்று அங்கத்தவர்களைச் சேர்ந்து பல்லாயிரக்கணக்காக நன்கொடைகளைப் பெற்று அமோக நன்மைகளடையும் வண்ணம் பொதுஜனங்களை வேண்டிக்கொள்கின்றோம்.

இச்சங்க நிர்வாகசபையினர் விடாமுயற்சியினாலும் நேர்மையினாலும் பொதுஜனங்களுக்குப் புரியும் இப்பணியைப் பாராட்டி எனது மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்ஙனம்
மயில்வாகனம் பிரசாத்,
அராலி தெற்கு,
அராலி.

யாழ்ப்பாணம்
29-5-62

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15.50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணாநந்தர்.**
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# 'சமாதான தாகத்தை எங்கும் கண்டோம்'

## பாராளுமன்ற கோஷ்டி தலைவர் அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

ரஷ்யாவுக்கும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் விஜயம் செய்த இலங்கைப் பாராளுமன்றத் தூதுகோஷ்டி நேற்று இலங்கை திரும்பியது.

"விஞ்ஞான ரீதியில் ஆக்கபூர்வமான சக்தியைப் பிரயோகித்து மிகப் பெரும் திட்டங்களை நிறைவேற்ற இந்நாடுகளில் முயற்சி செய்யப்பட்டு வருகிறது" என தூதுகோஷ்டியின் தலைவர் திரு. ஆர். எஸ் பெல்பொல கூறினர். ஒரு மாதம் இத்தூதுகோஷ்டி ரஷ்யா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தது. தாங்கள் சென்றவிடமெல்லாம் தங்களுக்கு அன்பான சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டதாயும், எங்கும் ஏற்பட்டுள்ள சமாதானத் தாகம் தங்கள் மனதைப் பெரிதும் கவர்ந்ததென்றும் திரு. பெல்பொல மேலும் கூறினர்.

திருவாளர்கள்: ராபர்ட் குணவர்த்தன, இந்திரசேன டி'சொய்ஸா, ஏ. கரியவாசம், வி. தர்மலிங்கம், டி. எம். குணசேகரா, எஸ். திலகரத்ன, போஸி விக்கிரமசிங்க, யு. பி, வை ஜினதாஸ், செனட்டர் கே. ஆதமலி, திரு. ஈ. வி. ஆர். சமரவிக்கிரம, திரு. ஆர். சென்ட். எல். பி. தெரனியகல ஆகியோர் தூதுகோஷ்டியில் நேற்று வந்த இதர அங்கத்தினர்களாகும்.

தூதுகோஷ்டியில் சென்ற மற்றும் இரு அங்கத்தவர்களான செனட்டர் ஸி. டி. எஸ். சிரிவர்த்தன, திரு. எல். பி, திஸ்ஸநாயக ஆகியோர் ஏற்கனவே நாடு திரும்பிவிட்டனர்.

திரு. நில் டி' அல்விஸ், செனட்டர் ரெஜி பெரேரா ஆகியோர் தற்போது செக்கோஸ்லோவேகியாவில் இருக்கின்றனர். திரு. ஷெல்டன் ரணராஜா பின்லாந்தில் இருக்கிறார்.

## விஞ்ஞான கூடம் அமைக்க விழா

முள்ளியவளை, செவ்வாய்

"வவனியாத் தொகுதியில் உள்ள மகா வித்தியாலயங்களுள் ஒன்றிலேனும், விஞ்ஞானக் கல்வி பயில்வதற்கேற்ற வசதிகள் இல்லை. அரசினரிடம் கேட்டால் நிதி இல்லை என்கிறார்கள். ஏற்கனவே இத்தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளும், வேறு தொகுதிகளுக்குப் போய்விட்டன. இந்நிலையில், கலா விநோத விழாவொன்றினை நடத்திப் பொருள் சேர்த்து, வித்தியானந்தக் கல்லூரியில் விஞ்ஞான கூடம் அமைக்க முயற்சி மேற்கொண்டுள்ளோம்."

முள்ளியவளை வித்தியானந்த கலா விநோத விழாக் குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

கலா விநோத விழாவொன்றினை நடத்துவதற்கு, மேற்படி கல்லூரிப் பெற்றார் அனுதாபிகள் சங்கத்தினால் ஒரு செயற்குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## இன்று உங்கள் பலன்

-சோதிட ஆசான் செ. தெல்லியூர்-

சுபகிருது ஆண்டு வைகாசித் திங்கள் 17ம் நாள் புதன் கிழமை (30-5-62) ஹிஜ்ரி ஆண்டு 1381, துல்ஹஜ் மாதம் 25-ம் பிறை.

இன்று இரவு 12-45 வரை துவாதசி. பின் திரயோதசி. காலை 8-28வரை ரேவதி. அதன் பின்னர் அச்சுவினி. மரண யோகம். வைஷ்ணவ ஏகாதசி. கரிநாள். புதியனவற்றில் தலையிடாது பகவத் பிரார்த்தனை செய்க. இராகுகாலம் 11-52 முதல் 1-22வரை.

திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் இவர்கள் சுப கருமங்களை மேற்கொள்ளுதலாகாது.

### இராசிப்பலன்

ரேவதி-அச்சுவினி: குடும்ப சுகம், போசன வசதி, பெண்களால் தொல்லை, பொருள் செலவு.

மேடம்: குடும்பக்கஷ்டம், மாதர் பகை, தொழில்விருத்தி, பண வரவு.

இடபம்: குடும்பசுகம், சந்ததிநன்மை, தாயாதிகளால் உதவி, வித்தைச் சிறப்பு.

மிதுனம்: நண்பர் மதிப்பு, குடும்பநலம், தொழில் வெற்றி, வாக்குவெற்றி.

கடகம்: தொழிலூக்கம், செலவதிகம், பிரயாண சுகம், பண வரவு.

சிங்கம்: தொழில் தகராறு, முயற்சிவெற்றி, தொழில் ஆதாயம், மதிப்பு.

கன்னி: பெரியோர் உதவி, குடும்பசுகம், தேவவழிபாடு, புகழ்.

துலாம்: தருமவழிச் செலவு, வித்தைச் சிறப்பு, தொழில் நலம், ஆதாயவரவு.

விருச்சிகம்: பிதுருவழிஉதவி, குடும்பநன்மை, பணவரவு, நிம்மதி.

தனு: பணமுடை, கடன் பயம், தெய்வஉதவி, உழைப்புக்கு ஊதியம்.

மகரம்: நண்பர் சேர்க்கை, கலைப்பயிற்சி, குடும்ப நிம்மதி, பிடிவாதம், மத்திம பலிதம்.

கும்பம்: நல்லோர்நட்பு, புகழ், பகைநீக்கம், சபலபுத்தி.

மீனம்: வாக்குவெற்றி, வித்தைச்சிறப்பு, மதிப்பு, குடும்ப நிம்மதி.

முத்தரையன்கட்டு

## காணிக் கச்சேரி

முள்ளியவளை, செவ்வாய்

வவனியா வடக்கிலுள்ள முத்தரையன்கட்டு குளப்பகுதியில் விவசாயிகளுக்குக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் காணி கொடுப்பதற்கான காணிக் கச்சேரி, பின்வருமிடங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மே 28, ஒட்டுசுட்டான்; மே 30, முல்லைத்தீவு; ஜூன் 5, நெடுங்கேணி; 7, புதுக் குடியிருப்பு; 9, தண்ணீரூற்று.


"டல்மியா" சிமேந்து BSS 12/1953 பிரமாணத்துக்கேற்ற வகையில் செய்யப்பட்டது.

" பைப்புக்கள், பைப்பு உபகரணங்கள்.

" நெருப்பினால் பாதிக்கப்படாத செங்கல்.

" நெருப்பினால் பாதிக்கப்படாத களிமண்

ஆகியவை எம்மிடமுண்டு,

**விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.**

**செட்டிநாடு கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிட்.,**

116, 118, கெயிஸர் வீதி, கொழும்பு.



**இசைக் கலா ரசிகர்களுக்கு ஒரு நற் செய்தி!**

பந்தநல்லூர் உயர்தர நாதஸ்வர வித்துவான்

**ரி. ஆர். தெட்ஷணாமூர்த்தி**

**அவர்களை**

அளவெட்டி, தவில் வித்வான்

**வி. என். குமரகுரு அவர்கள்**

இலங்கைக்கு முதன்முறையாக இசைச் சேவைசெய்வதற்கு வரவழைத்திருக்கிறார்.

— உங்கள் வைபவங்களுக்கு அழைத்து மகிழவும் —

**வி. என். குமரகுரு,**
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.






கிழக்கிந்தியக் கம்பெனி, இந்திய ராணுவம் ஆகியவற்றில் விக்டோரியா பதக்கம், ஜார்ஜ் பதக்கம் முதலிய கௌரவத்தைப் பெற்றவர்களின் ஞாபகார்த்தமாக, சமீபத்தில் கிளாஸ்டர் கோமகனுக்கு ஒரு புத்தகம் பரிசளிக்கப்பட்டது. இது சம்பந்தமான வைபவத்தில் (இடமிருந்து வலம்) பிரிட்டிஷ் யுத்தக் காரியதரிசி திரு. ஜோன் புரோபுமோ, லண்டனிலுள்ள இந்திய ஹைகமிஷனரின் ராணுவக் காரியதரிசி திரு. எம் வி. மேத்தா, கிளாஸ்டர் கோமகன், பீல்ட் மார்ஷல் சர் ஜெரால்ட் டெம்ப்ளர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# சமய அடிப்படையில் ராணுவத்தில் வேலை

## பௌத்த காங்கிரஸ் நிர்வாக கமிட்டி தீர்மானம்

கொழும்பு, திங்கள்

ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய பகுதிகளிலும் இதர பகுதிகளிலும் ஆட்களை வேலைக்கமர்த்தும் பொழுது நாட்டிலுள்ள சமயங்களின் சனத்தொகைக்கேற்ற விகிதத்தில் அமர்த்த வேண்டும் என்று அரசாங்கத்தை கேற்பதென்று சனிக்கிழமை கூடிய பௌத்த காங்கிரசின் நிர்வாகக் கமிட்டி தீர்மானித்திருக்கின்றது.

பௌத்த காங்கிரசின் தலைவர் சேர் லலிதா ராஜபக்சாவால் பிரேரிக்கப்பட்ட இந்தத் தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

சதிகாரணமாக ரணுவம், பொலிஸ் ஆகிய படைகளில உயர் பதவிவகித்து வந்தவர்கள் வேலை நீக்கப்பட்டுள்ளனர். அப்பதவிகளை நிரப்பும் பொழுது காங்கிரசின் வேண்டுகோளை நிவர்த்திசெய்ய வேண்டும். 25-7-1959-ல் பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு ஆர். டி பண்டாரநாயக்காவிடம் பௌத்த காங்கிரஸ் தலைவர் திரு. பி. டி. எஸ். குலரத்தினவினால் சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டில்படைகளில் பௌத்தர்களுக்கு காட்டும் பாரபட்சம்பற்றிவலியுறுத்தப்பட்டது.

அப்போது அவர் இப்படியான நியாயமற்ற செய்கையில் தான் கவனம் செலுத்துவதா சஒப்புக் கொண்டார். அத்துடன் இப்பதவிகளை பௌத்தர்களுக்கும் பங்கிடுவதற்கான நடவடிக்கைகள் எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

## கலகத்தில் 22 பேர் உயிரிழந்தனர்

அல்ஜியர்ஸ், திங்கள்

அல்ஜீரியாவில் நேற்று நடைபெற்ற கலகமொன்றில் 22 பேர் கொல்லப்பட்டார்கள். 5 பேர் காயமடைந்தனர். கடந்தவாரம் பாடசாலைகளைத் தாக்கிய இரகசிய இராணுவத்தினரின் வேலையிது என நம்பப்படுகிறது. ஜூலை முதலில் நடைபெறவிருக்கும் தேர்தலை சீர்குலையச்செய்யும் முகமாகவே இக்கலவரங்கள் தூண்டிவிடப்பட்டுள்ளன எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கல்விமுறை சீர் செய்யப்படும்

புதுடில்லி, மே 29

கல்வி முறையை சீர் செய்வதற்கு யோசனை கூறுவதற்காகவும் கல்வி முறைக் கொள்கையை அமுல் நடத்துவதை மேற்பார்வை செய்வதற்காகவும் நான்கு நிரந்தரக்கமிட்டிகள் அமைக்கப்பட விருப்பதாக கல்வி மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி நேற்று லோக சபையில் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவியளிப்பதற்கும் கல்வியின் தரத்தை உயர்வதத்துக்கும்பல நடவடிக்கைகள் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளதென்றும் கல்வி மந்திரி கூறினார்.

# காப்பரேஷன் பற்றி போதுமான தகவல்களில்லை

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க கார்ப்பரேஷன்கள் பற்றி பார்லிமென்டில் தெரிவிக்கப்படும் தகவல்கள் போதுமானவையல்ல என 1956-57 ம் ஆண்டு ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இப்போது பார்லிமென்டில் அரசாங்க கார்ப்பரேஷன்கள் பற்றி அறிவிக்கப்படும் தகவல்கள், கேள்வி-பதில்களாகவே இருக்கின்றன. தனிப்பட்ட அங்கத்தினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மந்திரிகள் அளிக்கும் பதில்களே அவைகள்.

இப்பிரச்சினைபற்றி பல்வேறு கார்ப்பரேஷன் தலைவர்களிடமும், நிரந்தரக் காரியதரிசிகளுடனும் கமிட்டி விவாதித்திருக்கிறது. இப்போதுள்ளதைவிட கார்ப்பரேஷன்கள்பற்றி அதிகமான புள்ளிவிபரங்களைத் தெரிவிப்பதற்கு அவர்கள் வழிசெய்வதாகத் தெரிவித்ததாயும் கூறப்படுகிறது.

## ஆஸ்பத்திரியில் பதுளை எம். பி.

பதுளை, செவ்வாய்

பதுளை எம். பி. திரு. பண்டா திடீரெனச் சுகவீனமுற்றதின் காரணமாய் பதுளை ஆஸ்பத்திரில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

## பகைநாகர் அரசாங்கம் பாகிஸ்தானில் அமைக்க முடியாது

கராச்சி, மே 29

பகைநாகர் தலைவர் பிஸோ பாகிஸ்தானில் நாகர் அரசாங்கம் எதையும் அமைப்பதற்கு அனுமதிக்கமாட்டோம் என்று ஜனாதிபதி அயூப்கான் அறிவித்துள்ளார்.

பிஸோ பாகிஸ்தானுக்கு வந்துள்ளதால் பாகிஸ்தானுக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானுக்குள் வராமல் தடுக்கவே முயன்றோம். ஆனாலும் அவர் இப்பொழுது பிரிட்டிஷ் பிரஜையாகவிருப்பதால் அவ்வாறு செய்ய முடியாது போய்விட்டது. அவர் பிரிட்டனுக்குத் திரும்பிச் செல்வதற்கு முயற்சி செய்துவருகிறோம் என்று ஜனாதிபதி அயூப்கான் கூறினார்.

## லைசன்ஸ் இன்றி 'டிராக்டர்' செலுத்தினர்

### ரூ. 300 அபராதம்

யாழ்ப்பாணம், புதன்

அராலி வடக்கைச் சேர்ந்த மாரிமுத்து வேலாயுதம் என்பவர் தமது 'டிராக்டரை' லைசன்ஸ் இன்றியும் வரி செலுத்தாமலும், இன்ஷூரன்ஸ் கட்டாமலும் செலுத்தியதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் எதிரிக்கு 300 ரூபாய் அபராதம் அல்லது மூன்று மாதக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

## தேசியசேவையில் பாதை அமைத்தனர்

அச்சுவேலி, செவ்வாய்

புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் சென்ற சனிக்கிழமை எட்டாம் வகுப்பு மாணவர்களும், எஸ். எஸ். ஸி. வகுப்பு மாணவர்களும் தேசிய சேவையில் ஈடுபட்டனர்.

சுமார் 7 யார்கொண்ட கரடு முரடான ஒற்றையடிப் பாதையை வாகனங்கள் செல்லும் பாதையாக ஆக்கிவைத்தனர். கமச் செய்கைக்கான சிறிய நிலமும் பாடசாலை வளவுக்குள் தேர்ந்தெடுத்தனர்.

## உத்தர பிரதேசத்தில் சீன ஊடுருவல்

### இல்லை என்கிறார் மேனன்

புதுடில்லி, மே 29

உத்திரபிரதேசத்தில் இரு ஜில்லாக்களில் சீனத்துருப்புக்கள் ஊடுருவெல் செய்துள்ளதாக வெளி வந்த செய்திகளை பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் நேற்று மறுத்தார்.

குறிப்பிட்ட இரு ஜில்லாக்களிலும் சீனர் ஊடுருவல் செய்யவுமில்லை புகைப்படங்கள் எடுக்கவுமில்லை என்று திரு. மேனன் கூறினார்.

## பாக். தூதர்-டீன்ரஸ்க் சந்திப்பு

வாஷிங்டன், மே 29

காஷ்மீர் பிரச்சனை சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு முள்ள தகராறு பற்றி வாஷிங்டனிலுள்ள பாக்கிஸ்தான் ஸ்தானிகர் நேற்று அமெரிக்க ராஜாங்க மந்திரியைச் சந்தித்து ஒருமணி நேரம் பேசினர்.

# 'நாடற்றவர்மீது மற்றொரு தாக்குதல்'

## இலங்கையர் மசோதாவுக்கு சென்னை 'ஹிந்து' கண்டனம்

சென்னை, மே 29

"தோட்டங்களில் இலங்கையர்களை கோட்டா முறையில் வேலைக்கமர்த்தும் விதத்தில் இலங்கை அரசாங்கம் சமீபத்தில் கொண்டுவந்துள்ள புதிய மசோதா இலங்கையில் நிரந்தரமாக வாழும் ஒருபகுதி மக்களை நசுக்குவதாக விருக்கிறது" என இந்தியாவிலிருந்து வெளியாகும் பிரபல 'ஆங்கில தினசரியான ஹிந்து ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

'நாடற்றவர்களுக்கு மற்றுமொருதாக்குதல்' என்ற தலைப் பின்கீழ் எழுதப்பட்டுள்ள தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

நாடற்றவர்கள் எனக் கூறப்படும் இவர்கள் இந்திய வம்சாவளியினராக இருந்தாலும் இலங்கையில் சந்ததி சந்ததியாக நிரந்தர வாசிகளாக வாழ்ந்து வருகிறார்கள். இலங்கையின் பொருளாதாரத்துறையில் முதுகெலும்பு போன்று விளங்கும் தோட்டங்களில் இவர்கள் ஓய்வின்றி உழைத்து வந்துள்ளார்கள். நாட்டின் வளத்துக்கு அவர்கள் பாடுபட்டு வந்ததுடன் அவர்கள் காட்டி வந்த விசுவாசத்தினால் இலங்கைப்பிரஜைகளாகவாழ அவர்களுக்கு பூரண உரிமையும் உண்டு. இத்தகையவர்களை 'நாடற்றவர்கள்' என இலங்கை அரசாங்கம் கணித்துள்ளது இவர்களுடைய தவறல்ல இந்தவித நிலைமை விரைவில் மாறும் எனக் கருதப்பட்டது. ஆனால் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் சிங்களத் தலைவர்கள் இந்தப் பிரச்சினையைத் தவறாக கணித்துள்ளார்கள். இதைத் தவறாக அணுகியமையால் பிரச்சினையில் சிக்கல் அதிகரித்ததுடன் நாட்டின் வளமும் குன்றியது. இலங்கை சுப்ரீம்கோர்டும் பிரஜா உரிமை கோரி மனுச் செய்திருந்த தோட்டத் தொழிலாளர்கள் விஷயத்தில் நீதி வழங்கியதாகக் கூறமுடியாது 'இந்த விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜைகளாகத் தகுதி உள்ளவர்களா என்பதைவிட இவர்களை இங்கிருந்து அனுப்பிவிடும் நோக்கத்துடனேயே விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டன' என சுப்ரீம்கோர்ட் நீதிபதி திரு. பெர்னாண்டோ தெரிவித்ததிலிருந்து இதுவிஷயம் வெளிப்படையாகத் தெரிய வருகிறது.

இலங்கையில் தொடர்ந்து வாழ விரும்பும் தோட்டத் தொழிலாளர்கள் விஷயமாக இலங்கை அரசாங்கம் ராஜதந்திரத்துடன் நடந்துகொள்ளும் காலம் வரத்தான் போகிறது தோட்டங்களில் இலங்கையர்களை கோட்டா முறையில் வேலைக்கமர்த்தும் விதத்தில் அரசாங்கம் கொண்டு வந்துள்ள புதிய மசோதா இலங்கையில் நிரந்தரமாக வாழும் ஒருபதி மக்களுக்கு வேலை வழங்க மறுத்து அவர்களை நசுக்குவதாகவிருக்கிறது. ஏற்கனவே 'நாடற்றவர்கள்' என இவர்கள் ஒதுக்கப்பட்டதால் இவர்களுடைய நிலை மோசமாகியுள்ளது. இலங்கை தோட்டத் தொழிலாளர்களின் தலைவர்களுள் ஒருவரான திரு. தொண்டமான் தோட்டங்களில் ஜனத்தொகை அதிகரித்து வருவதால் இங்கு மக்கள் வேலைதேடிக்கொள்வது கஷ்டமாகிவருகிறது என்றும் இவ்விதம் இங்கு வேலையற்றிருப்பவர்களுக்கு வடபகுதியில் இடமளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றதெனவும் தெரிவித்துள்ளார். தோட்டங்களில் வேலைபார்த்து வந்தவர்களின் பிள்ளைகளுக்கு இங்கு வேலைகள் மறுக்கப்படுவது நியாயத்துக்கு முரணான செயலாக இருப்பதோடு நிலைமை மேலும் மோசமாகும். இலங்கையை விட்டு இவர்களை வெளியே அகற்ற எடுக்கப்படும் நடவடிக்கை அதிக பயனைத் தருவதாக இராது. ஏனெனில் இவர்கள் இந்திய வம்சாவளியினரல்ல. இவர்களை இந்தியாவில் பிரவேசிக்க அனுமதிக்க முடியாது என புதுடில்லி அறிவித்துள்ளது. இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறதுஎன்பதுஉண்மையே. ஒருகோடி மக்கள் வாழும் இலங்கையில் 10 லட்சம் 'நாடற்றவர்களும்' 15 லட்சம் இலங்கைத் தமிழர்களும் புறக்கணிக்கப்படுவதால் நாலில் ஒருபகுதி மக்கள் நீதியற்ற முறையில் நடத்தப்படுகிறார்கள் என்பதை இலங்கை நண்பர்கள் உணரவேண்டும். குறிப்பிட்ட இந்தமசோதாவைக் கைவிட்டு வேற்றுமைகளை விடுத்து ஒற்றுமையை வளர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் இலங்கை வளமான முன்னேற்றமடைய வாய்ப்பிருக்கும்"

## தொகுதிகள் தோறும் முதல்தர பாடசாலை

### —கல்வி மந்திரி

காலி, திங்கள்

ஒவ்வொரு தொகுதியிலும் முதல்தரமான சிறந்த ஒரு பாடசாலையை நிறுவுவதே தமது உத்தேசம் என கல்வி ஒலிபரப்பு மந்திரி ஜனப் பதியுதீன் மஹ்மூத் நாகொடை நாக வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது கூறினார்.

"ஒரு சில வருடங்களில் தேசியக் கல்வியின் பயனைப் பெறுவது சாத்தியமில்லாமலிருக்கலாம். ஆனால் நமது காலத்தில் இதன் பலனைப் பார்க்கலாம்"என்றும் அவர் கூறினார்.

திரு. ஹென்றி திஸ்ஸநாயகா எம். பி., வித்தியாலய அதிபர் திரு. சந்திரபால சஹாபந்து ஆகியோரும் பேசினர்.

## "தெய்வீக பாடல்கள்"

தெல்லிப்பழை, திங்கள்

"இறையருள் பெற்ற அடியார்கள் அருளிய தெய்வீகப் பாடல்கள் தான் நாம் இன்னும் பெருமையுடன் வாழக் காரணமாக உள்ளது. இத்தகைய தெய்வீகப்பாடல்களுக்கு உரைகல்லாகத் திருவாசகம் விளங்குகின்றது மணிவாசகப் பெருந்தகை தான் அனுபவித்தன வற்றை உலகம் அனுபவித்து இன்புற வேண்டும் என்று விரும்பினர், அந்த விருப்பம் தான் திருவாசகப்பாடல்களாக தோன்றின என்று கூறின் அது மிகையாகாது."

இவ்வாறு பண்டிதர் திரு மா. மாணிக்கம் பன்னாலை சிவபூதராய ஆலய மண்டபத்தில் 'திருவாசகத்தேன்' என்பது பற்றிப்பேசும்போது குறிப்பிட்டார்.

பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. வை. கதிர்காமத்தம்பியும் பேசினர்.

## பிரதம மந்திரியின் தாயார் காலமானார்

கொழும்பு, திங்கள்

பிரதம மந்திரியின் தாயாரான 75 வயதான ரத்வத்த குமாரிகாமி இன்று காலமானார். அவரது ஈமைச் சடங்குகள் வியாழனன்று பிரதம மந்திரியின் ஹொரகொல்ல... மயானத்தில் நடைபெறும்.

### மணி வாக்கு

முதலில் நம்மை நாம் தூய்மைப்படுத்திக் கொண்டு, பிறகே ஆண்டவனிடம் செல்லவேண்டுமென்பதில்லை. அழுக்குடன் வரும் குழந்தையை தாயார் விரட்டுவதில்லை; அல்லது சுத்தமாக வருமாறு கேட்பதில்லை. குழந்தையை எடுத்து குளிப்பாட்டி, சுத்தமான உடை போட்டுவிடுவார். தாயினும் மிக்க அன்புள்ளவரல்லவா கடவுள்!

— சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு வைகாசி மீ 17 உ. (30-5-62)

## புதிய மேயரின் நல்ல வாக்குறுதி

யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய மேயராக டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டதற்காக அவரைப் பாராட்டுகின்றோம். அனுபவமும் திறமையும் மிக்கவர் அவர். ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தப்படி அவர் முன்னரே மேயர் பதவிக்கு வரவேண்டியவர் என்றாலும் அவர் சென்ற தேர்தலில் ஒற்றுமையை முன்னிட்டு போட்டியிடாமல் ஒதுங்கி இருந்தார். இப்போது அவர் இப்பதவிக்கான பொறுப்பை ஏற்க தியாக சிந்தையுடனே முன்வந்துள்ளது நன்றியுடன் வரவேற்கத்தக்கதாகும்.

புதிய மேயராகப் பதவி ஏற்றதும், டாக்டர் தர்மலிங்கம் பாராட்டுதலுக்குத் தமது நன்றியைத் தெரிவிக்கையில் நல்லதோர் வாக்குறுதி அளித்தார். 'சாதி, மதம், வட்டாரம், கட்சி என்ற எந்தப் பாகுபாடும் பாராது பாரபட்சமற்ற முறையில் ஈழத் தமிழரின் தலைநகரான யாழ்ப்பாண நகரின் அபிவிருத்திக்காகத் தொண்டாற்றுவேன்' என்று அவர் உறுதி அளித்தார். மேயர், நகரின் முடிசூடா மன்னராவார். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அவர், எல்லாருக்கும் பொதுவானவர். மேயராக வருவதற்கு முன் ஒருவர் எந்த அரசியல் கட்சியில் சேர்ந்திருப்பினும், மேயரானதும், அவர் கட்சி முதலிய வேற்றுமைக்கு அப்பாற்பட்டு விடவேண்டியவர். அப்போதுதான் அவர் எல்லாரது அன்பையும் நம்பிக்கையையும் மதிப்பையும் பெற்று, தமது கடமைகளை மேலான முறையில் நிறைவேற்ற முடியும்.

சென்னை மாநகர சபையின் வரவேற்புக்கு ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அளித்த பதிலில், கோஷ்டி மனப்பான்மை ஒழிய வேண்டுமென்றும், மனித நன்மையைப் பாதுகாப்பதே மிக மேலான கடமை என்றும் வற்புறுத்தினர். குறுகிய அபிமானங்களை விட்டு, நாம் உலகாபிமானத்தை நம் மனதில் வளர்க்கவேண்டுமென்றார். துரதிருஷ்டவசமாக யாழ்ப்பாண மாநகர சபையில் 'குறுகிய கோஷ்டி வேற்றுமைகள் வளர்ந்து, நகரின் அபிவிருத்தியையும் நற்பெயரையும் கெடுத்துவந்துள்ளது. இவ்வித குறைகள் இங்கு மட்டுமன்றி, மற்றும் பல ஸ்தலஸ்தாபனங்களிலுமிருப்பது உண்மையே. என்றாலும், மற்றவர்களுக்கு மேலான முன்மாதிரியாக யாழ்ப்பாண மாநகர சபை இருக்கவேண்டும். இதுவரை கோஷ்டி, கட்சி முதலிய வேற்றுமைகள் என்ன இருந்திருப்பினும் அவற்றையெல்லாம், பெரியமனது வைத்து நகர பிதாக்கள் இத்துடன் மறந்து, புதிய மேயருடன் ஒத்துழைத்து, யாழ்ப்பாண நகரின் சுதாதாரத்தையும், அழகையும், வசதிகளையும் மேம்படுத்த முற்படுவரென்றே நம்புகிறோம்.

சென்னைக் கடிதம்

# நேரு இலங்கை வருவது சந்தேகமே

—நமது சென்னை நிருபர்—

**இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் சம்பந்தப்பட்ட பிரச்னை சீக்கிரத்தில் தீரக்கூடிய அறிகுறிகள் காணப்படவில்லை. வருகிற ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் திறக்கப்படவிருக்கும் ஆயுர்வேத நிலையத் திறப்புவிழா நிகழ்ச்சிக்கு இந்தியப் பிரதமர் நேரு அழைக்கப்பட்டிருந்தாலும் அவர் இப்பிரயாணத்தை மேற்கொள்ள முடியுமா என்பதும் சந்தேகமே. பிரதமர் நேரு இலங்கை சென்றாலும் "நாடற்றவர்" பிரச்னை சம்பந்தமாக அவர் பேசப்போவதில்லை. ஆகையால், இலங்கை அரசாங்கம் தான் இந்த "நாடற்றவர்" பிரச்னையை ஒரு தலைபட்சமாகத் தீர்க்கவேண்டி வரும் இதை உணர்ந்த அதிகாரிகள் சில முக்கியமான திட்டங்களை வகுத்து வருவதாக அறிகிறோம்.**

இலங்கையில் வசிக்கும் "நாடற்ற பிரஜைகள்" என்று சொல்லப்படும் 10 லட்சம் இந்திய வம்சாவளி மக்களின் வருங்காலம் அவ்வளவு விரைவில் தீர்மானிக்கப்பட்டு விடலாம் என்று நம்புவதற்கில்லை. இந்திய அரசாங்கம் கைக்கொண்டிருக்கும் திடமான கொள்கையையும் சமீபத்தில் இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு பாராளுமன்றத்தில் பேசியதையும் பார்க்குமிடத்து இந்த "நாடற்றவர்கள்" என்ற மக்களுக்கும் இந்தியாவுக்கும் எவ்வித உறவுமில்லையாகையால், இந்தியாவைப் பொறுத்தவரையில் ஒன்றும் செய்யமுடியாதென்று தெரிகிறது. இந்திய பிரஜாவுரிமையைக் கொண்டு இலங்கையில் தற்காலிகமாக வசிப்பவர்களை இலங்கை அரசாங்கம் விரும்பிய சமயத்தில் வெளியேற்றலாம் என்ற கொள்கையை இந்தியா ஒப்புக்கொள்ளுகின்றது. ஆனால், இந்தியப் பிரஜை என்று நிரூபிக்க முடியாமல் இலங்கையில் வசிப்பவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இந்தக் கொள்கையிலிருந்து எள்ளத்தனையும் விட்டுக்கொடுக்க இந்தியா இசையாது என்பது சமீபத்தில் வெளிவந்த சில அவறிக்கைகளில் ஊர்ஜிதமாயிருக்கிறது.

### இலங்கையின் திட்டம்

சில மாதங்களுக்கு முன்பு சென்னையில் உதவி ஹைகமிஷனராக இருந்த ஓர் இலங்கை அதிகாரி "இலங்கை - இந்தியப் பிரச்னை"யைத் தீர்ப்பதற்கு சில மாற்றங்களைக் கண்டுபிடித்தார் என்று நம்பப்படுகிறது. அவர் இங்கிருக்கும்போது வட இந்திய உத்தியோகத்தர் சிலருடன் நட்புறவில் பல பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்தார். இலங்கையில் வசிக்கும் "நாடற்ற" மக்கள் முழுப் பேரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாகையால், தமிழ்நாட்டு அதிகாரிகளுடன் கலந்து பேசுவது எவ்வித பயனையுமளிக்காதென்று அவர் உணர்ந்தாராகையால், வடநாட்டதிகாரிகளுடன் பேசினர் என்று தெரிகிறது. இந்த உத்தியோகத்தரின் நவீன திட்டத்தின் படி, 5 லட்சம் "நாடற்றவர்"களை இந்தியா ஏற்கும்படி செய்வது; இவர்களுக்கு தலைக்கு இத்தனை ரூபா நன்கொடை என்று ஒரு குறிப்பிட்ட தொகையில் விசேஷ நிதியாக ஒதுக்கி வைப்பது; மிகுதியாயுள்ளவர்களை இலங்கையின் நிரந்தரவாசிகளாக ஏற்றுக்கொண்டு விடுவது. இத்திட்டம் இலங்கைப்பிரதமரின் அங்கீகாரத்தைப் பெற்றது என்று நம்பப்படுகிறது. "நாற்பது கோடி மக்களுக்கு உணவளிக்க முடிகிறபோது ஐந்து லட்சம் அதிகப் பேர் வந்துவிட்டால் பிரமாதமல்ல" என்று யாரோ ஒருவர் சொன்னதை வைத்துக்கொண்டு இந்தத் திட்டம் தயாரிக்கப்படுவதாகத் தெரிகிறது. இந்த அடிப்படையிலேயே, இந்தியப் பிரதமர் நேரு இலங்கைக்கு விஜயம் செய்யும்போது ஸ்ரீமதி பண்டாரநாயக்கா "சமரச"ப் பேச்சுவார்த்தைகள் நடத்த எண்ணியிருந்தார் என்று பேசப்படுகிறது. ஆனால், சமீபத்தில் பாராளுமன்றத்தில் ஸ்ரீநேரு விள்க்கிய கொள்கையைப் பார்த்ததும் இலங்கைப் பிரதமரும் மந்திரி சபையாரும் வேறு புதிய மார்க்கத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கலாம்.

### நேருவின் இலங்கை விஜயம்

இலங்கையில் நிறுவப்படவிருக்கும் ஆயுர்வேத நிலையத் திறப்புவிழா வைபவத்துக்கு நேருஜி அழைக்கப்பட்டிருந்தார். ஆரம்பத்திலேயே அவர் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டாரெனினும், இலங்கை அரசாங்கம் இரண்டு தடவை திகதியை ஒத்திப்போட்டு இப்பொழுது ஆகஸ்ட் மாதத்துக்கு தீர்மானித்திருக்கிறது. சமீபத்தில் உடல் நலக்குறைவுடனிருந்த பாரதப் பிரதமர் இப்போது காஷ்மீரத்துக்கு பத்துநாள் ஓய்வுபெறச் சென்றிருக்கிறார். திரும்பி வந்ததும், தமது புதிய மந்திரி சபையை நல்ல முறையில் ஸ்திரப்படுத்தும் அலுவலில் ஈடுபட்டிருப்பார். சீனவும் பாகிஸ்தானும் தலைவலியை உண்டாக்கி வருவதால் வெளி விவகாரப் பிரச்னைகள் அவருடைய நேரத்தில் பெரும் பகுதியையும் கவர்ந்துள்ளன. வருகிற செப்டம்பரில் காமென்வெல்த் மகாநாட்டுக்குப் போகவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் நேருஜி ஆகஸ்ட் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்வது சந்தேகமே என்று கருதப்படுகிறது.

### தமிழரசுக் கட்சியும் போராட்டமும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் மறுபடியும் மொழியுரிமைப் போராட்டம் நடத்தப் போவது பற்றிய செய்தி தமிழ்நாட்டில் பொதுவாக வரவேற்கப்பட்ட போதிலும் சென்ற ஆண்டில் ஏற்பட்ட மாதிரி நிலைமை ஏற்படாதிருக்கவேண்டுமே என்று கவலையுமிருக்கிறது. இலங்கைத் தமிழரின் மொழியுரிமை இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதில் இங்கு எல்லாக் கட்சியினருமே அபிப்பிராய பேதம் காட்டவில்லை. மத்திய அரசாங்கத்தில் சம அந்தஸ்து அளிக்க முடியாவிட்டால் சமஷ்டி வழங்கப்படுவது தான் முறை என்று எல்லாரும் கருதுகின்றனர். ஆனால் நாடு பிளவுபட்டு, தமிழ் மக்கள் வாழும் பகுதிகள் துண்டிக்கப்படுவதை எவரும் விரும்பவில்லை. திராவிட நாடு கோரும் தி. மு. க. வினரே இலங்கை துண்டாடப்படுவதை ஏற்றுக்கொள்ளவில்லை.

வருகிற ஜூன் 5-ம் திகதியைப் போராட்ட நாளாகக் கருதி இலங்கைத் தமிழரசுக் கட்சி ஹர்த்தால் முதலியவற்றை அனுட்டிப்பது இங்கு தமிழ் நாட்டிலும் சில எதிரொலிகளைக் கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தி. மு. க. பொதுக் கூட்டங்களும் ஏற்பாடாகின்றன. சென்னைச் சட்டசபையிலுள்ள தி. மு. க. அங்கத்தினரும் பொதுமக்கள் கவனத்துக்கு இந்த விஷயத்தைக் கொண்டுவர முயல்கின்றனர் என்று தெரிகிறது.

---

## யாழ்ப்பாண நீதிமன்றத்தில்...

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண நகரின் ஒரு வழிப்பாதை ஒழுங்கு விதியை மீறி பிரயாணம் செய்ததாகக் குற்றம் சாட்டி இரு சைக்கிள் பிரயாணிகள் மீது தொடரப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் இருவருக்கும் தலா 10 ரூபாய் அபராதம் விதித்தார்.

ஒரு சைக்கிளில் இருவர் பிரயாணம் செய்ததாக இரண்டு ஜோடிகள் மீது குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் இரு ஜோடிகளுக்கும் தலா 10 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

சைக்கிளில் லாம்பில்லாமல் இல்லாமல் இரவில் பிரயாணம் செய்ததாக ஐந்து மாணவர்கள் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழ்க்கில் தலா 5 ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டது.

ஆஸ்பத்திரி வட்டாரம் அமைதிவட்டாரமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதை மதிக்காது அப்பகுதியில் 'ஹார்ன்' அடித்ததாகக் குற்றம் சாட்டி இரண்டு மோட்டார் கார் சாரதிகளுக்கு தலா 10 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

---

## கல்வி அதிகாரிகள் இடமாற்றம்

வவனியா, திங்கள்

வவனியா மாவட்டக் கல்வியதிகாரி திருமதி ஆர். நவரத்தினம் 1-6-62 தொடக்கம் யாழ்ப்பாணக் கல்விபதிகாரியாகவும், யாழ்ப்பாணக் கல்வியதிகாரி திரு. தணிகாசலம் 1-6-62 தொடக்கம் வவனியா மாவட்டக் கல்வியதிகாரியாகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாண மாநகரசபையின் ஜனன ஜாதகத்தைப் பற்றி "செம்பாட்டான்" எழுதுவதாவது:

எங்கள் ஜனன பூமியாகிய யாழ்ப்பாணத்தில் 5-1-1949 பிற்பகல் சுமார் 5 மணியளவில் பூரட்டாதி நட்சத்திரத்தில் மாநகரசபை உதயமாயிற்று. காலஞ்சென்ற நியாய துரந்தரர் இராமலிங்கம் இராசா நல்லையா தலைமை வகித்தார். பழிவாங்கும் நோக்கத்துடன் இச்சபையை கலைக்க வேண்டுமென சிலர் முனைந்திருக்கும் இச்சமயத்தில் இது பற்றிக் கோள்கள் கூறுவதைக் கேட்போம்.

| | | | |
|---|---|---|---|
| 10 | ரா | 12 | ல |
| சந். | பூரட்டாதி | | 2 |
| செ. புதன் | | | சனி |
| கு. வி. | சு. | கேது | 4 |

பூரட்டாதி நட்சத்திரம். ஆகவே ஜனன வேளையில் குருமகாதிசையில் எஞ்சியுள்ளது வருடம் 4 மாதம் 1 நாள். 14 எனவே இன்று நடப்பது சனிமகாதிசை. சூரியபுத்தியாகும். இது 22-2-63 வரையில்.

எக்காரணத்தை முன்னிட்டோ சூரியனைத் தந்தை எனவும் சனியை மைந்தன்எனவும் சோதிட விற்பன்னர் கற்பனை செய்தனர். ஜனன சமயத்தில் சிங்கத்தில் தங்கி சங்கடப்பட்ட சனி, இன்று லக்னத்துக்கு எட்டில் செந்நாகத்துடன், செவ்வாய் உச்சனாய் அக்கினியைக் கக்க காற்றாகிய புதனும், பற்றுக் குறைக்கு வீச, அக்கினிப் பிளம்பு அட்டமஸ்தானமாக இதற்கூடாக திசாநாதன் நடக்கிறார். புத்திநாதன் குருவால் அடக்கப்பட்டிருக்கிறார். சனி திசை இவ்வளவு இலட்சணப்பட ஏழரைச் சனியும் தொட்டுக் கொண்டிருக்கிறது.

திசாநாதன் குருபார்வை பெற்றும் புத்திநாதன் குருவுடன் திசாநாதனுக்கு பஞ்சமத்தில் துஞ்சுவதால் அரசினர் தலையீடு நிலைக்காது; மாநகர சபை கலைக்கப்படமாட்டாது. மக்களைச் சிக்கலாக மலைக்க வைக்காது என்பது கோள்களின் கூற்று.

15-6-62-ல் உதயலக்கினத்தில் புத்திநாதன் தோற்றியதும் சுபசகுனமென்பது தெளிவாகிறது."

* * *

எனக்குச் சோதிடம் தெரியாது. இந்தப் பரிபாஷையும் புரிவதில்லை. என்றாலும் சோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ளவன். என் நண்பர் ஒருவர் 'நாடி' சோதிடம் பார்த்தார். அவரது ஏட்டிலே அவர் குடும்பத்தைப்பற்றிய விவரமெல்லாம் அப்படியே கொடுக்கப்பட்டுள்ளன. பார்க்க மிக வியப்பாக இருந்தது.

வார சோதிடம், பத்திரிகையில் வருகிறதல்லவா? அதைப் பார்ப்பேன். நல்ல பலனாக இருந்தால் மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் கெட்டபலன் போட்டிருந்தால் அந்தச்சோதிடத்தை ஏன் பார்த்தோமென்றுதோன்றும். "நாளென் செயும் வினைதான் என்செயும், எனை நாடிவந்த கோளென் செயும், கொடுங் கூற்று என் செயும்..." என்ற பாட்டை நினைவு கூர்ந்து ஒருவிதமாக ஆறுதல் கொள்வேன்.

இப்போது யாழ்ப்பாண மாநகர சபைபற்றி 'செம்பாட்டான்' கூறும் சோதிடத்தைக் கேட்க மிக மகிழ்ச்சியாகவுள்ளது. இச்சபையைக் கலைக்க முடியாதென்றும், அடுத்தமாதம் 15-ந் திகதிக்குப்பின் சபைக்கு நல்ல காலமென்றும் கூறியுள்ள சோதி

(5-ம் பக்கம் பார்க்க)

# ஊழல்களை விசாரிக்க விசேஷ நீதிமன்றம்

## பிரதமருக்கு வர்த்தக மந்திரி யோசனை

கொழும்பு, செவ்வாய்

**மோசடி, ஊழல் ஆகியவைபற்றிய விசாரணைகளைத் துரிதப்படுத்தி, குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு நியாயமான தண்டனை அளிப்பது சம்பந்தமாக வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன பிரதமரிடம் பல யோசனைகளைச் சமர்ப்பித்திருக்கிறார்.**

ஊழல்கள்பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரணைசெய்து அவைகளைத் துரிதமாகத் தீர்க்கும் பொருட்டு முழுநேர விசேஷ நீதிமன்றங்களை நிறுவுமாறு அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். தற்போது இலாகாத் தலைவர்களே தங்களின் தினசரி வேலைகளுக்கு மத்தியில் இவ்வித விசாரணைகளை நடத்திவருவதால், தாமதம் ஏற்பட்டு வருகிறதெனச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் வழக்கறிஞர்கள் ஆகியோர்களைக்கொண்டு இந்த நீதிமன்றத்தை அமைக்கலாம் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

ஊழல்கள்பற்றிய வழக்குகள் மாஜிஸ்டிரேட் கோர்டுகளுக்குப் போகாமல நேரடியாக டிஸ்டிறிக்ட் கோர்ட்டுக்கு வரும் வகையில் சட்டம் இயற்ற வேண்டும் என்றும் மந்திரி கூறியிருக்கிறார். அத்தியாவசியப் பொருட்களைப் பெருமளவில் கையளும் தமது அமைச்சின் கீழ் விசேஷ ஸி. ஐ. டி. யூனிட் ஒன்றை நிறுவவேண்டும் என்றும் மந்திரி யோசனை கூறியிருக்கிறார்.

---

## காலி மீன்பிடி துறைமுக அமைப்பு

### அதிக மீன்களை பெறமுடியும்

காலி, திங்கள்

காலியில் உருவாகும் மீன்பிடித் துறைமுகத்தின் மூலம், இந்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் மீனிலும், கூடுதலான மீன்களைப்பெற முடியுமென மீன்பிடி இலாகா கணக்கிட்டுள்ளது.

அரசாங்கத்தினால் கட்டப்படும் இம்மீன்பிடித் துறைமுகம், 1964-ம் ஆண்டு முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தை அமுலாக்குவதற்கு 150 முதல் 200 லட்ச ரூபாய் வரை தேவையாகுமென்று தெரியவருகிறது. இப்பணம் வெளிநாட்டு மூலதனத்திலிருந்தும் தனியார் மூதலீடுகளிலிருந்தும் பெறப்படும்.

---

## நேரத்திற்கு வராத வங்கி ஊழியர்கள்

### சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

ஒழுங்கான நேரத்திற்கு வேலைக்கு வராத வங்கி ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படும். சரியான காரணமின்றி மாதம் மூன்று தடவைகள் வீதம், வருடத்தில் 3 மாதம் தாமதமாக வேலைக்கு வந்தால் அவர்களது சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படும்.

அநேக ஊழியர்கள் சரியான நேரத்திற்கு வருவதில்லை என்ற காரணத்தை உத்தேசித்து, வங்கி அதிகாரிகள் இந்த நடவடிக்கையை எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறார்கள். மத்திய வங்கியின் உதவி கவர்னர் திரு வில்லியம் தென்னக்கூன், நேரத்திற்கு வரவேண்டிய அவசியம் பற்றி சகல ஊழியர்களுக்கும் அறிவித்திருக்கிறார்.

---

## கொதிநீருக்கு குழந்தை பலி

நாவலப்பிட்டி, செவ்வாய்

கொத்மலை வெஸ்ரோல் தோட்டத்தைச் சேர்ந்த 3 வயதான விஜயலட்சுமி என்னும் குழந்தை கொதிநீர் பட்டதால் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எல். பண்டார அத்தநாயக்கா மரணவிசாரணை நடத்தியபின் விபத்திற்கு காரணமாக கவலையீனமாக இருந்த குழந்தையின் பாட்டியை எச்சரிக்கை செய்து அதிர்ச்சியினாலும் எரிகாயங்களினாலும் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

வீட்டு வராந்தையில் வெந்நீர்ப்பானை வைக்கப்பட்டிருந்ததாம். வீட்டிற்குள் புகுந்த கோழிகளைப் பாட்டி துரத்தியபோது அவை வெந்நீர்ப் பானையைத் தட்டிவிட்டன. பக்கத்திலிருந்த குழந்தை கொதிநீருக்குப் பலியானது. மரணவிசாரணையில் இச் சாட்சியம் தெரிவிக்கப்பட்டது.

---

# 'கலைத்திறனைப் போற்றும் பண்பு வளரவேண்டும்'

## இசைவிழாவில் உதவி வித்தியாதிபதி உரை

கொடிகாமம், செவ்வாய்

"நாம் ஒவ்வொருவரும் எங்கள் நாட்டிற் பிறந்த எங்கள் சகோதரர்களுக்குத் தொண்டு புரிவதையே லட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும். அரசாங்கம் கலையை வளர்க்கும் நோக்கமாக ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு பிரதேச கலாமன்றத்தை ஸ்தாபித்து வருகின்றது. எதிர் காலத்தில் ஒவ்வொரு பாடசாலையிலும் சங்கீத ஆசிரியரை நியமித்து சங்கீதம் ஒரு முக்கிய பாடமாகப் படிப்பிக்க ஒழுங்கு வகுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் முன்றிலில் மீசாலை தமிழ்இசைச்சங்க இசைவிழாவின் நான்காம் நாள் வைபவத்துக்குத் தலைமை வகித்த வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். யூ சோமசேகரம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

திரு. சோமசேகரம் மேலும் பேசியதாவது:-

நம் நாட்டிலுள்ள பலர் சங்கீதம் பயிலும் நோக்கமாக அண்ணாமலை, சென்னையிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குச் சென்று சங்கீத ஆசிரியராகி இங்குவந்து தொண்டாற்றுகின்றார்கள். அவர்களின் சேவையைக் கொண்டும் இங்கே பயின்றுகொண்டவர்களின் சேவையைக்கொண்டும் சங்கீதக்கலையை வளர்க்க நாம் உறுதிகொள்ளவேண்டும் நம் நாட்டுப்பணம் நம்நாட்டிலேயே உபயோகிக்கப் படவேண்டுமெனும் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு இனிமேல் அண்ணாமலை, சென்னை கலாசாலைகளுக்குச்செல்ல அனுமதி கிடையாது. அன்றியும் 'இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை' என்றாற்போல இலங்கையிலுள்ளவர்களுக்கு இந்திய கலைஞர்கள் பெரிதாகத் தோன்றினும் தற்போது இலங்கையிலும் சிறந்த கலைஞர்கள் இருக்கின்றார்கள். இன்னும் உருவாகி வருகின்றனர். 1930-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட வட இலங்கைச் சங்கீதசபை1948 ம் ஆண்டு தொடக்கம் இசைப் பரீட்சைவைத்து இசையாசிரியர்களின் தொகையைக் கூட்டி வருகின்றது. இது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. சில வித்துவான்கள் மற்றவர்களைக் குறைகூறிக் கொள்கின்றனர். இப்பழக்கம்கலைஞர்களிடையே தவிர்ந்து ஒவ்வொருவரிடம் உள்ள கலைத் திறனையும் போற்றும்பண்பு வளரவேண்டும்.

மேலைத் தேசங்களில் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் பெரியோர்களும் சிறுவர்களும் கூடிப்பாடுதலில் தேர்ச்சிபெற்றிருப்பதை நேரில் கண்டிருக்கிறேன். இருபதினாயிரம் பேர் கூடியசபையிலும் சேர்ந்து பாடும்போது ஒரேவகையான சப்தம் தோன்றுவது கேட்க இனிமையாயிருக்கும். இது சேர்ந்து பாடிய பயிற்சியால் ஏற்பட்டதாகும். ஆதலால்எமது நாட்டிலும் உள்ள ஆலயங்களிலும் எல்லோரும் சேர்ந்து பாடும் பயிற்சியை வளர்க்க வேண்டும்.

சங்கப்போஷகருள் ஒருவராகிய பண்டிதர் எஸ். கே. தம்பையா வித்தியாதிபதியை வரவேற்றுப் பேசினார்.

திரு ஏ. சோமசுந்தரம், திரு. எஸ். எஸ். இரத்தினம் பிள்ளை, செல்வி. சௌந்தரவல்லி உமாமகேஸ்வரன் அவர்களினதும் சில மாணவிகளினதும் [illegible]டுக்கச்சேரிகள் நடைபெற்றன.

---

## மின்சார நிலயத்துக்கருகில் 'லைட்' இல்லை

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் இடையிடையே மின்சாரம் தடைப்பட்டுவருதாகப் புகார் செய்யப்பட்டு வருகிறது யாழ்ப்பாணம் மின்சார நிலையத்தாரின் நிலைபற்றி அறியாததாலேயே இந்தவித புகார் அதிகரிக்கிறது.

சென்ற ஒரு வார காலமாக மின்சார நிலையத்துக்கருகிலுள்ள மின்சார 'லைட்' ஒளியின்றியிருக்கிறது என்பது சிலருககுத்தான் தெரியும்.

இப்படி அருகிலுள்ளதற்கே 'சப்ளை' பண்ண முடியாத நிலையிலிருக்கும்போது மற்றவற்றைக் கவனிக்கவில்லை என முறைப்படுவது முறையாகுமா?

---

## நீ அன்பு மிக்க...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிப்பட்ட சில்லறை விஷயங்களினால் அயலவர்களுடன் நித்திய பகை ஏற்படுகிறது. இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். முன்பு நாங்கள் இருந்த வீட்டிற்கு அடுத்த வீட்டுக்காரர் உடைந்த ஒரு போத்தலின் துண்டுகளை எங்கள் வளவுக்குள் வீசி விட்டார்கள். அதைக் கண்ட எங்கள் அம்மா அவற்றை எடுத்து மறுபடியும் அந்த வளவுக்குள் போட்டு விட்டாள். இப்படியே ஒரு மாதமாக போத்தல் துண்டுகள் இந்த வளவுக்கும் அந்த வளவுக்கும் மாக மாறிமாறிச் சென்றன. கடைசியில் போர் மூண்டது வாய்ப்போர். இதுவே இன்றுவரை அம்மாவையும் நம் அயலவர்களையும் பிரித்து வைத்துள்ளது. ஏதோ நல்லகாலமாக நாம் இப்போ அந்த வீட்டில் இல்லை இல்லாவிடில் போர் இப்போதும் நடந்து கொண்டிருக்கும். பார்த்தாயா? இந்தச் சின்ன விஷயம் எவ்வளவில் போய் முடிந்து விட்டது! முதல் நாளே அந்த அயலாரை அழைத்து போத்தல் துண்டைக் காட்டி விஷயத்தை விளக்கியிருந்தால் எல்லாம் சரியாகிப் போயிருக்கும். நீ ஒரு சிறந்த அயலவளாக வாழ்ந்து சிறப்படைய வேண்டுமானால் நான் மேற்கூறிய விஷயங்களில் கவனம் செலுத்து இதுவே உன்னை ஓர் சிறந்த அயலவளாக்கும்; மற்றவர்களால் மதிக்கப்படும் அயலவளாக்கும் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

இங்ஙனம்,
உனது அக்கா.

---

## ஆந்திர மகிள சபை..

(6 பக்கத் தொடர்ச்சி)

சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு சங்கம் நாட்டிலுள்ள மகளிருக்கு இன்று பெரிய சேவையாற்றிவருகின்றது. அதுமட்டுமல்லாமல் ஏனைய நாட்டுமாதர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் அளவுக்கு அது இன்று வியாபித்துவிட்டது. இவையெல்லாம் மாதர்களின் முயற்சி என்று நினைக்கும் போது மனங் குளிருகின்றது. இந்தியப் பெண்மணிகள் இவ்வளவிற்கு முன்னேறியுள்ளார்கள். இலங்கை பெண்களும் இப்பேற்பட்ட மாதர்நல சங்கமொன்றை ஸ்தாபித்து அனாதைப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வறியவர்களுக்கும் சேவையாற்றினால், இலங்கை மாதர் தமது நாட்டுக்கும் சேவையாற்றுபவர்களாவாரல்லவா? ஆந்திர மகில சபையின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் தென்னிந்திய சமுதாயத்தில் அது இன்று வகிக்கும்முக்கியத்துவத்தையும் படித்தறிந்துகொண்ட இலங்கைமாதர்களுக்கு அப்பேற்பட்ட மாதர் நல சங்கமொன்று எம்மிடையேயும் உருவாகவேண்டுமென்ற ஆர்வம் எழாமல் இருக்கமுயாது. திக்கற்றபெண்களுக்கு சரன் அளிப்பதே ஆந்திரமகில சபையின் நோக்கம் எந்த நாட்டிலும் திக்கற்ற பெண்கள் இருக்கத்தான் செய்வார்கள். எமது நாட்டிலுள்ள திக்கற்ற பெண்களுக்கு, எமது நாட்டிலுள்ள கல்விகற்றபெண்கள் இப்பேற்பட்ட சங்கமொன்றை நிறுவி விமோசனமளிக்கலாமல்லவா?

---

## சூதாடியவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள ஒரு கட்டிடத்தில் பணம் வைத்து சூதாடியதாக 16 பேர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவாலன் எதிரிகளுக்கு தலா 20 ரூபாய் அபராதம் விதித்தார்.

---

## மகாவலியில் வெள்ளம்

நாவலப்பிட்டி, செவ்வாய்

கடந்த ஞாயிற்றுக்கிழமை 2 மணி நேரத்திற்குமேல் பெய்த மழையின் காரணமாக, மகாவலிகங்கையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு தாழ்ந்த பிரதேச வீடுகளுக்கு சேதத்தை உண்டுபண்ணியது ஒருவர் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டு, பின் காப்பாற்றப்பட்டார். உலப்பனை என்னுமிடத்தில் ஒரு மரம் விழுந்ததின் காரணமாக மற்றொருவர் கொல்லப்பட்டார்.

---

# போலி டாலர், பவுன் நோட்டுக்கள் அச்சடிப்பு

## கண்டுபிடிப்பதில் பொலிஸார் தீவிரம்

கொழும்பு, செவ்வாய்

போலி டாலர் நோட்டுகளும், பவுன் நோட்டுக்களும் இலங்கையில் அச்சடிக்கப்படுவதாக பொலிசார் கண்டுபிடித்திருக்கின்றனர்.

சமீபத்தில் அவர்கள் நடத்திய இரு சோதனைகளில் வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளும் நபர்களிடம் இத்தகைய போலி டாலர், பவுன் நோட்டுக்களைக் கண்டுபிடித்தனர். கள்ள நாணயக் கடத்தல் நடைபெறும் நாடுகளில் இலங்கையும் ஒன்று எனக் கூறப்படுகிறது. இவ்விதச் செயலில் ஈடுபட்டிருப்பவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிசார் இப்போது ஈடுபட்டுவருகிறார்கள்.

---

## அதிக உயரத்தில் குண்டுப் பரீட்சை

நியுயோர்க், மே 29

மிகச் சக்திவாய்ந்த ஒரு அணு ஆயுதத்தைப் பசிபிக்கிலுள்ள ஜோன்சன் தீவில் இன்னும் நான்கு தினங்களுக்குள் அதிக உயரத்திலிருந்து வெடித்துப் பரீட்சிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

---

## தேசிய சேவையில் வீதி அமைத்தல்

சாவகச்சேரி, திங்கள்

"மன்னர் ஆட்சி மறைந்து மக்கள் ஆட்சி நிலவும் இக்காலத்தில் மக்களே தங்கள் குறைகளின் பெரும்பகுதியை நிறைவேற்ற வேண்டும். மக்கள் ஆட்சிக்காலத்தில் தேசிய சேவையின் மூலமே இலங்கையின் பெரும் பகுதியான குறைகளை நிவர்த்திக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இதைப் பின்பற்றிப் பிற்போக்கான நமது கிராமத்தையும் முற்போக்கான கிராமமாக்க முதற்கண் தேவையாகவிருப்பது போக்கு வரத்து வசதியேயாகும். தன்னையே தனக்கு உதவியென்பதைமனத்திற்கொண்டு இங்கு கூடியிருக்கும் பன்னிரண்டு சங்கங்களின் அங்கத்தவர்களும் தேசிய சேவையென்னும் திட்டத்தின்கீழ் பெரிய தூவிற்குளத்தினூடாக ஒரு தெரு அமைக்க உழைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

இவ்வாறு கைதடி—நாவற்குளி மாதர் கிராமச்சங்கத் தலைவரும், மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியருமான திரு. என். பொன்னம்பலம் பதினாயிரம் ரூபாய் செலவில் பெரிய தூவிற்குளம் தெரு அமைக்கும் ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

---

## ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

டம் நம்பிக்கை அளிப்பதாகவுள்ளது.

ஆனால் சபையிலுள்ள நமது "கோள்கள்" ஒத்துழைக்க வேண்டுமென்றும் அதைப் பொறுத்தே சபையின் தலையெழுத்தும் இருக்குமென்றும் கூறுகிறார் பக்கத்திலுள்ள நண்பர். உண்மைதானே.

* * *

புலனைந்தும் பொறி கலங்கி, நெறி மயங்கி, அறிவழிந்திட்டு, ஐமேலுந்தி, அலமந்தபோது ஆக அஞ்சேல் என்றருள் செய்வான் அமருங் கோயில், வலம் வந்த மடவார்கள் நடமாட முழ அதிரமழை என்றஞ்சி, சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே.

— திருஞானசம்பந்தர்.



# மங்கையர் ★ உலகம்

# ஆந்திர மகில சபையும் அதன் அரிய சேவையும்

"சமுதாய வாழ்க்கையில் பங்குபற்றுவதற்குப் பெண்களுக்கு உரிமையுண்டு. அவ்வாறு பங்குகொள்ளவேண்டியது பெண்களின் பெரும் கடமையும்மாகும். பெண்கள் எந்தக்கடமைகளை மேற்கொண்டாலும் அவர்களுக்கென்றே தனிப்பண்பாடு அமைந்துள்ள 'பெண்மை' நெறியினின்றும் தவறுதல் கூடாது."

**வெள்ளிவிழாவில்—ஜனாதிபதி ராதாகிருஷ்ணன்**

சில் தினங்களுக்கு முன்னர் சென்னையில் ஆந்திர மகில சபை என்னும் மகளிர் சபை தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடியது. சபையின் அமைதியான ஆனால் ஆணித்தரமான முயற்சிகளை ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் வெகுவாகப் பாராட்டினார். பெண்கள், குழந்தைகளின் சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் சபை ஆற்றியுள்ள தொண்டுகளும் சாதனைகளும் பாராட்டுக்குரியன என்றார்.

ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அவர்களே சென்னைக்கு விஜயம் செய்து விழாவை ஆரம்பித்து வைத்தார் என்றால் பாருங்களேன்.

முன்னேற்றமடைந்துள்ள சமுதாயம் ஒன்றில் பெண்கள் வகிக்க வேண்டிய ஸ்தானம் பற்றி ஜனாதிபதியவர்கள் விழாவில் தாம் ஆற்றிய சொற்பொழிவின்போது குறிப்பிட்டார்.

"இந்தியாவில் பெண்களுக்கும் ஆண்களைப் போன்று சம உரிமையுண்டு. அரசியல் சட்டமும் இதை அனுமதிக்கின்றது. சமுதாய வாழ்க்கையில் போதிய அளவுக்குப் பங்குபற்றும் உரிமை இந்திய மாதர்களுக்கு உண்டு. அவ்வாறு சமூக வாழ்க்கையில் ஈடுபட வேண்டியது அவர்களது கடமையாகும்" என ஜனாதிபதியவர்கள் இந்திய மாதர்களின் உரிமைகளையும் அந்த உரிமைகளே அவர்களது கடமையாகுவதையும் குறிப்பிட்டார். ஜனாதிபதியவர்கள் இவற்றுக்கும் மேலாக இன்னுமொரு அம்சத்தை வலியுறுத்தினார். அதாவது "எந்த முயற்சியை மேற்கொண்டாலும் பெண்கள் தமக்கு இயல்பான பெண்மை நெறிகளினின்றும் தவறுதலாகாது" என்பதாகும்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் இந்த அறிவுரை இந்திய மாதர்களுக்கு மட்டுமின்றி உலக மாதர்கள் அனைவருக்குமே விடுத்த நல்உபதேசம் என மாதர்குலம் ஏற்றுக் கொள்ளலாம்.

நாம் சேவை செய்கின்றோமே, கடமை செய்கின்றோமே என்ற நினைவுகூட இல்லாமல் பணியாற்றுபவர்கள் பெண்கள். இல்வாழ்க்கை நடாத்தும் பெண்கள் பெரும்பாலாருக்கும் கஷ்டங்கள் ஏற்படுவது சகஜம். அவற்றை எதிர்த்துப் போராடிச் சமாளிக்கும் திறனும் பல பெண்களுக்கு உண்டு. ஆனால் கஷ்டம் ஏற்படும் சமயங்களில் மனமுடைந்து தமது கடமைகளின் மகத்துவத்தை மறந்துவிடும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதை நினைவூட்டுகின்றது ஜனாதிபதியவர்கள் தாய்மைபற்றி மேலும் கூறிய வாக்கியங்கள்.

ஒரு நாட்டை உருவாக்குபவர்கள் தாய்மார்களே என்றார் அவர்.

"ஒரு தேசத்தை உருவாக்குபவர்கள் பெண்கள். அங்குள்ள மனிதர்களின் மனத்தையும் இதயத்தையும் சீராக்குபவர்களும்பெண்களே. இராமரின் தூக்கத்தைக் கலைப்பதற்கு விசுவாமித்திரர் இராமரது தாயாரின் பெயரை உச்சரித்தார். தனது தாயாரின் பெயர் கேட்கும்வரை இராமர் தமது தூக்கதினின்றும் எழுந்திருக்கவில்லை என்று உதாரணங்கூறித் தாயின் சிறப்பை ஜனாதிபதி எடுத்துரைத்தார். ஒரு தாயின் ஸ்தானம் மிகவும் அபூர்வமான ஸ்தானம் என்றார். உலகத்திலே கெட்டபுதல்வர்கள் இருக்கலாம். ஆனால் கெட்ட தாய்மார்கள் இருக்க முடியாது என்று ஆதிசங்கரரின் தத்துவத்தை எடுத்துக் கூறித் தாய்மாரின் பெருமையை ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். ஒரு தாய் தனது சேய்க்காகத் தன்னைத் தியாகம் செய்கிறாள். ஒரு தாயானவளுக்கு அவளது குழந்தையே எல்லாமாகும். எத்தனையோ நெருக்கடிகளைப் பெண்கள் இன்று சமாளிக்க வேண்டியவர்களாகின்றனர். பல்வேறு துறைகளிலும் அவர்களது உழைப்பும் பிரயாசையும் சென்று கொண்டிருக்கின்றது. எனினும் அவர்கள் தமது இயற்கையான பெண்மைக் குணங்களை இழந்துவிடவில்லை."

ஜனாதிபதியவர்களின் இந்த மொழிகள் உண்மையில் பெண்களுக்குத் தெம்பூட்டுகின்றன; உற்சாகமளிக்கின்றன. குடும்ப வாழ்க்கையிலும் பொருள் தேடும் துறைகளிலும் உழைத்துவரும் இன்றைய பெண்களுக்கு ஏற்படும் 'பிரச்சினைகள்' அநேகம். பிரச்சினைகள் அல்லா தவற்றையும் 'பிரச்சினைகள்' என்று கற்பனை செய்து வீணாக வேதனைப்படும் பெண்கள் தொகை அதிகரித்து வருகின்றது. இப்படியான ஒரு சமயத்தில் ஜனாதிபதியைப் போன்ற ஒரு உலகப் பெரியார் "பெண்கள் சகலதுறைகளிலும் உழைத்து வருகிறார்கள் எனினும் அவர்களுக்குச் சொந்தமான, பெண்மைப் பண்புகளினின்று அவர்கள் தவறிவிடவில்லை" என்று கூறினால் அதையிட்டுப் பெண்குலம் மகிழ்ச்சியும் பெருமையுமடைய வேண்டாமா?

ஒருவன் தவறு செய்து கொண்டு மடிந்து போகலாம். ஆனால் உயிருடன் வாழும் போது ஏனையோருக்குத் தீங்கு செய்வதிலும் அவன் மடிந்து விடுவது மேல். இரக்கமே உருவான தாய்மார்கள் பழிக்குப்பழி வாங்குவது பொருத்தமாகாது என்பதையும் அன்பினாலே உலகை அடிமைப்படுத்த வேண்டியவர்கள் பெண்கள் என்பதையும், டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பல உதாரணங்களைக் கொண்டு விளக்கினார்:

"இலட்சியத் தாய்மார்களுக்குப் பெயர் வாய்ந்த நாடு நமது நாடு. திரௌபதியின் பிள்ளைகளை அசுவத்தாமர் கொன்றபோது திரௌபதி தாங்கொணாத் துயருற்றாள். எனினும் அசுவத்தாமரை அருச்சுனன் கொலை செய்ய முற்பட்டதைத் திரௌபதை சிறிதும் விரும்பவில்லை. தனயனை இழந்தால் தாய் எவ்வளவு வருத்தப்படுவாள் என்பதை உணர்ந்து திரௌபதி அவ்வாறு நடந்து கொண்டாள். அன்பினாலும் ஆதரவினாலுமே பெண்கள் இந்த நாட்டை வளப்படுத்தி வைத்துள்ளார்கள். தீமை செய்பவர்களை ஒறுப்பது அவர்களது பண்பாடாகவிருக்கவில்லை. இன்றைய உலகிலும் தனிப்பட்ட கல்வியாலும் தொழில்நுட்ப வல்லமையாலும் நெருக்கடி நிலைமைகளைச் சமாளிக்க முடியாது. மனிதனின் அத்தியாவசியபண்புகளில் ஒன்றான அன்பினால் தான் எதையும் வெல்ல முடியும். பெண்கள் அனைவரும் இந்தப் பண்பை வளர்க்கப் பெரிதும் உதவ வேண்டும்."

25 வருட காலமாக ஆந்திர மகிலசபை ஆற்றிய மகத்தான சேவைகளை ஜனாதிபதி பாராட்டினார். அவரது சொற்பொழிவு பெண்கள் அனைவருக்கும் உற்சாகமூட்டியுள்ளது.

## வெள்ளிவிழா

வெள்ளிவிழா ஏற்பாடுகள் வெகுவிமரிசையாகவிருந்தன. ராஷ்டிரபதியவர்களே வெள்ளிவிழா மண்டபத்தைத் திறந்து வைத்தார். எம். எஸ். சுப்புலட்சுமியின் துதிப்பாடல்களுடன் விழா ஆரம்பமானது. வெள்ளிவிழா நினைவு மலர் ஒன்று அழகாக வெளியிடப்பட்டது. பித்தளையினால் செய்யப்பட்ட 'தாயும் சேயும்' உருவச்சிலை ஒன்றை ஜனாதிபதியவர்கள் திரைநீக்கம் செய்து விழாவைத் தொடக்கி வைத்தார்.

ஜனாதிபதியவர்கள் விழாவில் காட்டிய அக்கறையே ஆந்திர மகிலசபை எந்த அளவிற்கு வளர்ந்துள்ளது என்பதற்கு அத்தாட்சியாகும் எனச் சென்னை கவர்னர் திரு. விஷ்ணுராம்மேதி தமது சொற்பொழிவின் போது கூறினார்.

ஆசிரியைகள் பல்வேறு மொழிகளிலும் எழுதிய நூல்கள் கண்காட்சியொன்றும் காண்பிக்கப்பட்டது. பெண்கள் கைப்பணிப்பொருட்களின்கண்காட்சியொன்றையும் ஸ்ரீமதி சமலாதேவி சட்டோபாத்யா திறந்துவைத்தார். வெள்ளிவிழாவை மகிலசபையினர் எந்த அளவு கோலாகலமாகக் கொண்டாடினார்கள் என்பது இவற்றால் புலனாகின்றது.

## மகிலசபை தோற்றமும் நோக்கமும்

திக்கற்ற பெண்கள் புனர் வாழ்வுக்கும் படிப்புக்கும் என ஆரம்பிக்கப்பட்டதே இந்த மகிலசபை. குழந்தைகள் சங்கமாக ஆரம்பிக்கப்பட்ட இது ஆயிரக்கணக்கான பெண்களை புதுவாழ்வுக்கு வழிகாட்டியது. இந்த ஸ்தாபனம் வளர ஒரே ஒருவர் காரணமென்றால் அப்பெருமை திருமதி துர்க்காபாய் தேஷ்முக்கையே சாரும்.

1937-ல் ஆரம்பித்து 1949வரை அரசாங்கத்தின் எந்த உதவியுமின்றி வளர்ந்தது. ஆந்திராவுக்கும் தமிழ் நாட்டுக்கும் பெரும் சேவை புரிந்துவருகின்றது இந்த மகளிர் ஸ்தாபனம். இச்சபை இந்தியசமூக சேவை வரலாற்றில் ஒரு முக்கிய பகுதியாகும். சமூகசேவை மனப்பான்மையுள்ள பெண்களின் அயராத முயற்சியையும் லட்சிய உறுதியையும் ஒரு எடுத்துக்காட்டாக ஆந்திர மகிலசபை வரலாற்றில் காணலாம்.

1936-ம் ஆண்டில் மைலாப்பூரில் பிருந்தாவனம் என்று அழைக்கப்படும் துவாரகா காலனியில் உள்ள குழந்தைகள் ஒன்றாக ஆடிப்பாடி விளையாடி ஒரு கோஷ்டி அமைத்துக் கொண்டனர். அதற்கு பிருந்தாவனத்து சிறு சீமாட்டிகள் என்று பெயரிட்டனர். விளையாட்டுடன் பாட்டும் நாட்டியமும் கற்றனர். வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டனர்.

குழந்தைகள் சங்க முதல் ஆண்டுவிழாவுக்கு முன்னை நாள் அமைச்சர் திருமதி ருக்மணி லட்சுமிபதி தலைமை வகித்தார். குழந்தைகளுடன் அவருடைய தாய்மார்களும் வரவே சங்கம் பெரிதாயிற்று. ஆரம்பத்திலே 100 பெண்கள் ஒழுங்காக வர ஆரம்பித்தனர். சித்திரம்வரைதல், சங்கீதம் ஆகியவை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டன. மூன்றாவது ஆண்டுவிழாவுக்கு வந்திருந்த ஜெய்ப்பூர் மகாராணி ரூபா 5000 நன்கொடை வழங்கினார். அதன்மூலம் தொழில் பகுதி உருவாயிற்று.

> **கடமையில் உரிமை!**
>
> தனது கடமைகளைச் சரிவரச் செய்கின்ற பெண், உயர்ந்த அந்தஸ்தை அடைகிறாள். தான் தலைவியாய் இருந்து நடத்தும் குடும்பத்தில் அவள் அடிமையாய்க் கிடப்பதில்லை. அரசியாய் ஆட்சி செலுத்துகிறாள்.
>
> —மகாத்மா காந்தி

1942-ல் யுத்த பயம் காரணமாகச் சங்க வளர்ச்சிக்குத் தடைகள் ஏற்பட்டன எனினும் 20 பெண்கள் படித்துத் தைரியமாகக் காசிக்குச் சென்று மெட்ரிக்குலேஷன் பரீட்சை எழுதித் தேர்வு பெற்றனர்.

1943 ல் சங்க நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டு தையல் எம்புராயடரி, பாய் முடைதல், அச்சுத் தொழில், நெசவுத் தொழில் ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பெண்கள் பயனடைந்தார்கள். சகல தனவந்தர்களின் உதவியுடன் சபை வளர்ந்து வந்தது. 1945 ல் மகாத்மா காந்தி சபையைப் பெரிதும் பாராட்டினார்.

சங்கம் படிப்படியாக வளர்ந்து, 300 பெண்களுக்கு படிப்பும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. ஆண்டு தோறும் பெண்கள் பரீட்சைகளுக்குத் தோற்றினர். மாணவிகளுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் அச்சகம் நிறுவப்பட்டது. 100 பெண்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்க மத்திய அரசாங்கம் முன்வந்தது. அங்கவீனமான பிள்ளைகளுக்கும் ஏனையோருக்கும் ஆஸ்பத்திரி நிறுவப்பட்டுப் பெண்கள் அதில் சேவையாற்றத் தொடங்கினர். தாதிமார் தங்குவதற்கும் வீடு வசதிகள் ஏற்பாடாகின்றன. பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பிரத்தியேகமான பூங்கா ஒன்றை அமைக்கும் பொறுப்பை நகரசபை மகில சபையிடம் ஒப்படைத்துள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

# 'நீ அன்புமிக்க அயலவளா? இல்லையானால்....'

— திருமதி செல்வா தனராஜ் —

அன்புத்தங்கை தங்கத்திற்கு

எனது இரு கடிதங்களும் படித்து இன்புற்றதாக எழுதியிருத்தாய். மிகவும் மகிழ்ந்தேன். நீ புதியதோர் இடத்தில் புதியசூழ்நிலையில் உனக்கு முன்பின் தெரியாத அயலாருடன் சேர்ந்து பட்கி வாழவேண்டியவளாய் இருக்கிறாய். அந்த அயலவர்களுடன் நீ எப்படிச் சேர்ந்து வாழவேண்டும்? அவர்கள் உள்ளம் கவர்ந்து அவர்களுடன் எப்படிப் பழகவேண்டும் என்பதைப் பற்றி உனக்குச் சில புத்திமதிகள் கூறலாமென்று நினைக்கின்றேன்.

"ஊருடன் கூடிவாழ்" "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" என்று பழந்தமிழ் உரைகள் கூறுகின்றன. இந்த பழமொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒழுகவேண்டிய காலம்இது. அயலாருடன் கூடிவாழ்ந்து கோடி நன்மை பெறவேண்டிய நேரமிது. புதுக்குடித்தனம் நடத்தப்போகும் நீ ஒரு புதுமைப் பெண்ணாகச் சிறக்கவேண்டுமெனில் அயலாருடன் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும், வாழவேண்டும்.

'ஐயோ என்ற அவலக்குரலுக்கு உடனோடிவருபவர்கள் உன் அயலவர்களே. அயலில் உள்ள பெண்களோடு சேர்ந்து பழகு. அப்படிப் பழகும்போது மற்றவர்கள் குறை குற்றங்களைப்பற்றி அவர்களுடன் உரையாடாதே. அப்படி அவர்கள் பிறரைப்பற்றிய குற்றங்களைப் பேசும்போது நீ அவ்வுரையாடலிலிருந்துவிலகிக்கொள். அப்படிச்செய்யாது நீயும்சேர்ந்து அவர்களுடன் கூடிப்பேசினையானால் அதனால்வரும் பலாபலன்களையும் அனுபவிக்க ஆயத்தமாயிரு. ஆம். அவைதான் 'வேலிச்சண்டைகள்.'

இந்தப் பரம்பரைச் சொத்தான 'வேலி வாய்வீச்சுச் சண்டைகள்' பெண்களினால் ஏற்படும் ஒன்றுஎன்பது எனது அனுபவ அறிவு. பொறாமை என்ற பொல்லாதகுணம் ஆண்களிலும்பார்க்க பெண்களிடம் அதிகமுள்ளதுஎன்பது எனது எண்ணம். இந்தப் பொல்லாத குணம்தான் உன் அயல்வர்களையும் உன்னையும் பிரித்து வைக்கக்கூடிய சக்திபடைத்த கூரிய ஆயுதம். அயலில் வசிக்கும் அல்லி அணிந்திருக்கும் ஆடை ஆணிகளைப்பற்றி பக்கத்துவீட்டு பங்கஜத்துடன் பேசாதே "அடி பாரடி, அவளை. நேற்று கோவிலுக்கு ஒரு புதுப் பட்டுப் புடவை, இன்று அந்தக் கலியாணவீட்டுக்கு வேறோர் புடவை, வேறு டிசைனில் நெக்லஸ்" என்ற கதைகளை மட்டும்உன் அயலாருடன் கதையாதே. இதனாலேயே நீ உன் பொறாமைக் குணத்தை வெளிக்காட்டாது இருக்கமுடியும். முன்பொரு கடிதத்தில் நான் கூறியதுபோல் "போதுமென்ற மனம்" இருந்தால் பொறாமை பறந்தோடிவிடும்.

அயலவர்களின் சுகதுக்கங்களில் முழுமனதுடன் பங்கு கொள்ள வேண்டும் இது உனது கண்ணியமான கடமை என்பதை மறந்துவிடாதே. அவர்கள்வீட்டில் நடைபெறும் சுபதினங்களுக்கோ மணவீடுகளுக்கோ மரணவீடுகளுக்கோ முதலில் சென்று உதவுவது அயலவர்களாக இருக்கும் உனது பணி. அயலவர்கள் ஆடு மாடு உங்கள்எல்லைக்குள் நுழைந்துவிட்டது என்பதற்காக அவர்களை இகழ்து வலுச்சண்டைக்குப் போய்விடாதே. அவர்களை அன்புடன் அழைத்து அவர்கள் ஆடுமாடுகளினால் உன் தோட்டத்திற்கு வந்த சேதத்தை அன்பாகவே எடுத்துக் கூறு. அடுத்தமுறை அப்படி அவர்கள் கவலையீனமாகத் தம்மிருகங்களை அவிழ்த்துவிட மாட்டார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம்தெரிவுக்கோஷ்டிக்கு சீவரத்தினம் தலைமைதாங்குவார்

## கைப்பந்தாட்டக்கோஷ்டி இறுதித் தெரிவு இவ்வாரம் நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை ஒலிம்பிக் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் விளையாடடுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான அமைப்புச்சபை நேற்று மத்திய கல்லூரி மண்டபத்தில் கூடி ஆராய்ந்தது.

இந்த விளையாட்டு விழாவில் இடம் பெறவிருக்கும் கைப்பந்தாட்டப் போட்டியில் கொழும்புக் கோஷ்டியும், யாழ்ப்பாணக் கோஷ்டியும் மோதவிருக்கின்றன.

யாழ்ப்பாணக் கோஷ்டிக்கு விளையாட்டு வீரர்களைத் தெரிவு செய்வதற்காக பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற பரீட்சார்த்தத் தெரிவுப் போட்டிக்கு 40 வீரர்கள் வந்திருந்தனர். இதில் 16 பேர் இப்பொழுது தெரிவு செய்யபபட்டுள்ளனர். அடுத்த மாதம் 3-ம் திகதிக்கும் 8-ம் திகதிக்குமிடையில் நடைபெறவிருக்கும் இறுதித் தெரிவில் 10 பேர் தெரிவு செய்யப்படுவர்.

யாழ்ப்பாணம் கைப்பந்தாட்டத் தெரிவுக் கோஷ்டிக்கு திரு. எம். சீவரத்தினம் காப்டனாக இருப்பார்.

எம். தங்கராசா (சென். ஜோன்ஸ்), ஐ பொன்னம்பலம் (ஸ்டான்லி), கே. சுப்பிரமணியம் (விக்னேஸ்வர வித்தியாசாலை), எஸ். நாகரத்தினம் (சீமெந்து தொழிற்சாலை), என். இரததினசபாபதி. பி. வயிரவசுந்தரம், எஸ். அருணசலம் (பலாலி ஆசிரிய பயிற்சிக்சலாசாலை), ஏ. ஏ. ஜெகதீச, டி. எம். சந்திரபாலா (பொலிஸ்), வி. தம்பிரத்தினம் (கலைமகள்), எம். பத்மநாதன் (உடுவில்), டி. எஸ். சண்முகலிங்கம், எம். சீவரத்தினம் (அரியாலை விளையாட்டுக் கழகம்), பி. எம். பியதாசா (கடற்படை), என். செல்வநாயகம் (உடுவில்ஸ்ரார்), கே. தங்கவடிவேல் (திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை) ஆகியோரே இப்பொழுது தெரிவு செய்யப்பட்ட 16 பேருமாவர்.

## நோயின் வேதனை தாங்காமல் தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

ஐந்துவருட காலமாக தொய்வு நோயினால் கஷ்டப்பட்ட வட்டுக் கோட்டையைச் சேர்ந்த வேலன் நாகமுத்து என்பவர் வேதனை தாங்க முடியாமல் மாமரக்கொப்பில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

வேலன் நாகமுத்துவின் மகன் நாகம்மா சாட்சியமளிக்கையில் தனது தந்தையின் மரணம் சம்பந்தமாக சந்தேகம் எதுவுமில்லையென்று கூறினார்.

டாக்டர் ஏ. வைத்தியலிங்கம் பிரேதபரிசோதனை நடத்தினார். தற்கொலையெனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## 40 லட்சம் செலவில் புதிய சப்பாத்து தொழிற்சாலை

கொழும்பு, செவ்வாய்

ரூ. 40 லட்சம் செலவில் புதிய தோல் தொழிற்சாலை ஒன்றை அரசாங்கம் நிறுவவிருக்கிறது. ஜூலை மாதம் உற்பத்தியை ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப் படுகிறது. வெளிநாட்டு உதவியுடன் இத் தொழிற்சாலை நிறுவப்படவிருக்கிறது. வருடம் 3 லட்சம் ஜோடி சப்பாத்துக்களை இத் தொழிற்சாலை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை 325 தொழிலாளர்களுக்கு வேலையளிக்கும்.

## வண்டியிலிருந்து விழுந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

பூநகரியிலுள்ள தாம்பரன் என்னுமிடத்தைச் சேர்ந்த மாணிக்கம் அப்புக் குட்டி என்பவர் வண்டியிலிருந்து விழுந்ததால் மரணமானார்.

வண்டியிலிருந்து விழுந்த மாணிக்கம் அப்புக்குட்டி பூநகரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அவர் மரணமானார்.

இவரது மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

டாக்டர் அஸி. விஜயராஜா சாட்சியமளித்தார்.

விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## மந்திரியின் மாற்று யோசனை

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கக் குமாஸ்தாக்கள் சேவை யூனியன் தலைமைக் காரியாலயத்தை அரசாங்கம் மேற்கொள்வதுபற்றி தாம் ஒரு மாற்று யோசனையைச் சமர்ப்பிக்கபபோவதாய் உள்நாட்டு, கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா, அரசாங்க சேவைத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இதர தொழிற் சங்கங்கள் இடம் கோரினால், அவைகளுக்கு அரசாங்க சேவை தொழிற் சங்க யூனியன் கட்டடத்தில் இடமளிக்க வேண்டுமென அரசாங்கம் எழுதவேண்டுமெனத் தாம் சிபார்சு செய்வதாக அவர் கூறினார்.

அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் அரசாங்கப் பாராளுமன்றக் கூட்டத்தில் சில அங்கத்தினர்கள் இவ்விஷயத்தைக் கிளப்புவார்கள் எனத் தெரிகிறது. மற்றும் அநேக எம். பி. க்களும் குமாஸ்தாக்கள் சேவை யூனியனுக்கு ஆதரவுதெரிவித்துள்ளனர்.

## க்ஷயரோக நிவாரண சங்கம்

பருத்தித்துறை, செவ்வாய்

இலங்கை க்ஷயரோக நிவாரண தேசியசங்க வடமராட்சிக் கிளையின் ஆறுவது வருடாந்தக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. வி. கே. சின்னையா தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை 'ரெக்ரியேஷன் கிளப்' மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இலங்கை தேசிய காசநோய்த் தடுப்புச் சங்கத் தலைவர் டாக்டர் எப். ஜெயசூரியா, பகுதிக் காரியாதிகாரி திரு. ஜே. டி. அர்னல்ட், டாக்டர். எஸ். கதிர்காமத்தம்பி, திரு. சி. இராசசிங்கம்முதலானோர்பிரதம பேச்சாளர்களாகக் கலந்துகொண்டனர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00,

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 வீணை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஜலதரங்கம்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 பி. வயித்தியநாதசர்மா—வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உங்கள்பிரச்சினை, 9-45 சரஸ்வதி பாக்கிய ராஜா—பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 சாலியமங்கலம் ஆர். வி. சுந்தரம் ஐயர்—வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-15 இசைக் கோவை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ராஷ்யமுன்னேற்றம்—பேச்சு, 7-45 'ஆராய்ச்சி மனம்'—நாடகம், 8-00 சாலிய மங்கலம் ஆர். வி. சுந்தரம் ஐயர்—வீணை, 8-30 திரைப்பட இசை, 9-15 நல்லுரை, 9-20 லயவின்யாசம், 9-50 இசைமாலை.

## ஆயுர்வேத பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

வடஇலங்கை சுதேச வைத்தியசபையார் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேதக் கல்லூரியில் சென்ற மார்ச்மாதம் நடாத்திய வருடாந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்களை தராதர ஒழுங்கின்படி வெளியிட்டிருக்கின்றார்கள்.

**4-ம் வருடம் (டி. ஏ. எம்.)**

2வது பிரிவு

என் பத்மநாதன், ஏ. அருமைநாயகம்.

**3-ம் வருடம்**

எம். குருசிவனார், எஸ். சந்தியாப்பிள்ளை, ஐ. பாலசுப்பிரமணியம்.

**2-ம் வருடம்**

1-வது பிரிவு

எஸ். திருநாவுக்கரசு, எஸ். விநயகமூர்த்தி, எஸ். மகாலிங்கம்.

2-வது பிரிவு

கே. விசுவலிங்கம், எஸ். புவனேஸ்வரி, எம். தேவமதுரம், வி மாசிலாமணி, ஜி. ராதாகிருஷ்ணன், எம். சிவகடாட்சம், கே. சண்முகநாதன், கே. தங்கராசா, எஸ். பரராசசேகரம்.

**1-ம் வருடம்**

1-வது பிரிவு

ஏ. கலைமகள், சற்குணசரோஜினி, பி அருளப்பு

2-வது பிரிவு

ஆர். கனகலிங்கம், ஏ. குணரட்ணம், ஈ. ஸ்ரீஜெயதேவி, ஏ. இராசதுரை, டி' காசிநாதன், எஸ். ஞானகணேசன், எஸ். தியாகராசா, கே. குணரட்ணம், ஏ. குணநாதன், ஏ. எம். வரப்பிரசாதம், வி. யேசுதாசன், வி. தேவராசன், வி. பாலகிருஷ்ணன், டி' முத்துக்குமாரசுவாமி, கே. வேலாயுதபிள்ளை, எஸ். மிருத்தின்ஜெயம்.

முள்ளியவளை, செவ்வாய்

இங்குள்ள விவசாயிகளுட் சிலர், தங்களுக்குக் கீச்சிக்குளத்தின் கீழ் காணி தரவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளும் விண்ணப்பமொன்றினை, வவனியா அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.





நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

கனபோ பொப்லின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்லின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் இடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோஷ், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/11

# கம்யூனிஸ்ட் பட்ஜட்டை ஏற்க முடியாது

## என்கிறார் நிதிமந்திரி

மாத்தறை, செவ்வாய்

"கம்யூனிஸ்ட் பட்ஜட்டுக்கு ஆதரவு தேடி கம்யூனிஸ்ட் கட்சி நாடு முற்றிலும் சென்று பிரசாரம் செய்து வருகிறது. இந்த பட்ஜட்டையும் சகல ஆலோசனைகளையும் நாம் ஏற்றுக்கொண்டால் பௌத்த நாடான இலங்கை ஜனநாயக நாடாக இயங்க மாட்டாது. ஹிட்லரின் ஆட்சிக்குக் கீழ் இயங்கும் நாடாக மாறிவிடும்" என நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மாத்தறையில் ஒரு ஆஸ்பத்திரி கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரதமர் திருமதி பண்டாரநாயகா, சுகாதார மந்திரி திரு. ஏ பி. ஜெயசூரியா, ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு மகாநாம சமரவீரா ஆகியோர் அடிக்கல்களை நாட்டினர்.

இந்த விழாவில் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா மேலும் பேசியதாவது:-

தேர்தல் காலங்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அளித்தவாக்குறுதிகளை ஜனநாயக ரீதியில் நிறைவேற்றி வருகிறது. அரசாங்கத்தில் வெறுப்பு கொண்டுள்ள பிற்போக்குவாதிகள் வீணை அரசாங்கத்தின் மீது குறை கூறுகின்றனர்.

நாம் எல்லோரையும் திருப்திப்படுத்தி விடமுடியாது. அரசாங்கத்தின் நிதி நிலை சீராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் எம்மை பதவிக்குக் கொண்டு வந்த பொதுமக்களின் நலன் குறித்து உழைத்து வருகிறோம்.

நட்டட வேலைகளைகம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்துவருகிறது. அரசாங்கம் ஆஸ்பத்திரிகளையும், பாடசாலைகளையும், பாலங்களையும் கட்டாது விட்டுவிட்டால் பொதுமக்களுக்கு எதுவித நலனும் கிட்டாது போய் விடும்.

அரசாங்கம் அவசிய தேவையில்லாத செலவுகளை நிறுத்தவே முயற்சிசெய்துவருகிறது.

ஊழல்களையும், கைலஞ்சம் வாங்குவதையும் ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏமாற்றுபவர்கள் மீது அரசாங்கம் ஒருவித இரக்கமும் காட்டாது.

கம்யூனிஸ்ட் எம். பி. யான டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா ரஷ்யாவுக்குச்சென்று சிகிச்சை பெறுவதற்காக தாம் அங்கு பணம் கொண்டுசெல்ல அனுமதி கோரியுள்ளார். மாத்தறையில் ஆஸ்பத்திரி கட்டி முடிந்தவுடன் அவர் அங்கு செல்ல வேண்டிய அவசியமேற்படாது என நான் கூற விரும்புகின்றேன்.

திரு. மகாநாம சமரவீரா பேசுகையில் கம்யூனிஸ்ட் கட்சியும் 'சில இறந்த அரசியல் கட்சிகளும்' ஆஸ்பத்திரி பிரச்னையில் என்மீது பழிவாங்க நினைக்கின்றன. பெரும்பாலான மக்கள் இதற்குச் சார்பாக இருப்பதால் இவரானது திட்டம் வெற்றியளிக்காது என்றார்.

---

## "இந்தியாஉதவி" கமிட்டி விஸ்தரிக்கிறது

வாஷிங்டன், மே 29

பாரதத்துக்கு உதவியளிக்கும் நாடுகளின் கூட்டம் நேற்றுக் கூடியபின், வேறு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளும், உலக வங்கியும் "இந்தியா உதவிக் கமிட்டி"யில் இருக்கின்றன. பெல்ஜியம் நேற்றைய கூட்டத்தில் ஒரு பார்வையாளரை அனுப்பியிருந்தது.

ஆஸ்திரியா, ஹாலந்து ஆகிய நாடுகள் கமிட்டியில் குழு அங்கத்தினர்களாகக் கலந்துகொள்ளும் எனத் தெரிகிறது. வேறு பல நாடுகளும் இக் கமிட்டியில் சேரக்கூடும் எனத் தெரிகிறது.

---

## மணக்கோலத்தில் ஆஸ்பத்திரி சென்றனர்

பையகலை, செவ்வாய்

புதிதாக மணஞ் செய்து கொண்ட தம்பதிகள் இருவர் திருமணக் கோலத்துடனேயே இரத்தக் காயத்துடன் நாபொடா ஆஸ்பத்திரிக்குச் சென்றார்கள்.

மணமகளுக்குத் தலைமண்டையிலிருந்து பெருவாரியாக இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

மணப்பெண்ணின் சகோதரனைத் திருமண வைபவத்தில் சேர்த்துக் கொள்ள வில்லையாம். இதுகாரணமாகக் கோபங்கொண்டிருந்த அவர், மாப்பிள்ளையின் தந்தையாருக்கு அடித்து விட்டு மணப்பெண்ணை தனது சகோதரியின் தலைக்கு கல்லால் குறி வைத்தாராம்

---

## ராஷ்டிரபதி-ராஜாஜி சந்திப்பு

சென்னை, மே 29

சென்னை வந்துள்ள ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நேற்று ராஜாஜியை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்.


### வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ........................

கல்லூரி ........................

எனது பெயர் ........................

விலாசம் ........................

இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.


## 'யாழ்ப்பாணப் பேச்சு சிறந்தது'

### வித்துவான் ஐயன்பெருமான் கருத்து

யாழ்ப்பாணம், செவ்வாய்

"யாழ்ப்பாணமக்களின் பேச்சுத் தமிழ் எவ்வளவு சிறப்பு வாய்ந்தது? 'வடிவு' என்ற சொல்லைத் தென்னிந்தியாவில் இலக்கியத்திலேதான் காணலாம். ஆனல் அது பேச்சு வழக்கில் யாழ்ப்பாணத்தில் வழங்குகிறது"

இவ்வாறு வித்துவான் ஐயன்பெருமான் கோனார் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தமிழ்மன்றத்தில் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

"கம்பன் கவியின்பம்" என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்தினர்.

செல்வன் குரு. சிற்றம்பலம் தமிழ்த்தாய் வணக்கக் கீதம் பாடினர். கூட்டத்துக்கு ஆசிரியர் திரு. ஷண்முக. குமரேசன் தலைமை வகித்தார்.

வித்துவான் ஐயன்பெருமான் கோனர் பேசியதாவது:-

"பழமைவாய்ந்தமத்திய கல்லூரியிற் பேசுவது எனக்குப் பெருமை தருகிறது. யாழ்ப்பாண மக்களின் பேச்சுத்தமிழ் எவ்வளவு சிறப்பு வாய்ந்தது? 'வடிவு' என்னும் சொல் தென்னிந்தியாவில் இலக்கியத்திலே தான் காணலாம். ஆனல், யாழ்ப்பாணத்தில் அது பேச்சில் வழங்குகிறது. "வள்ளுவர் மானத்தைப்பற்றி அழகாகக் கூறியிருக்கிறார். மானமிழந்தவன், தலையிலிருந்து விழுந்த மயிருக்குச் சமமானவன் என்பது வள்ளுவர் கருத்து. இன்றைய பெண்களிற் பலர் தலை சீவுவதே பழைய பண்பான முறைக்கு மாறானது நடந்து நடந்து தலைசீவுகின்றார்கள். மற்றவர்களின் உணவோடு இவர்களின் தலைமயிரும் பல சமயங்களிற்சேர்ந்துவிடுகிறது. "தமிழுக்குக் 'கதி' 'யாவார் இருவர்" என்னும் கூற்றில் 'க' கம்பனைக் குறிக்கிறது; 'தி' திருவள்ளுவரைக் குறிக்கின்றது. வால்மீகி ஈந்த 'பலாக் கனி' யாம் இராமாயணத்தைக் கம்பன் எடுத்துப் 'பிசின்' அகற்றிச் சுளை சுளையாகத் தோலும் சேர்த்துத் தந்தான் என்று நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை பாடியிருக்கிறார். மிதிலைக் காட்சிப் படலத்திற் கொடிகள் இராமனை வரவேற்பதாகக் கம்பன் பாடியிருக்கிறான். கம்பனின் ஓசை நயம் மிகவும் சிறந்தது. சொற்களைக் கையாளும் முறை வியக்கத்தக்கது."

ஈற்றில் செல்வன் ஆ குணசிங்கம் நன்றி கூறினர்.

---

## சிங்கள தமிழ் மொழிகளில் விஞ்ஞானபாடப்புத்தகம்

கொழும்பு, செவ்வாய்

விஞ்ஞானப பாடக்கல்விப் பயிற்சிக்கான ஆதாரப் புத்தகங்களைச் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார அபிவிருத்தி ஸ்தாபனம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இந்த விஞ்ஞான பயிற்சிப் பாடப்புத்தகம் முதல் முதலாக 1956-ல் வெளியிடப்பட்டது. வெளியிட்ட கால முதல் இதற்கு அதிக கிராக்கி இருந்து. வந்துள்ளது. இப்போது இந்தப் புத்தகம் மொத்தமாக 8 மொழிகளில் வெளியாகியுள்ளது. மேலும் 15 மொழிகளில் இதைப் பெயர்ப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

உலகத்தின் பல பாகங்களிலுள்ள விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கு உதவும் பொருட்டு இந்தப் புத்தகத்தை ஐ. நா. ஸ்தாபனம் வெளியிட்டது. உள்ளூர் உபகரணங்களுடன் நடாத்தக் கூடிய பரிசீலனைகள் பற்றியும் இந்த நூல் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

# வகுப்புவாதப் பேய் தலைதூக்க அரசாங்கம் விடாது

## மந்திரி கலுகல்ல உறுதி

வெலிமடை, செவ்வாய்

'தற்போதுள்ள அரசாங்கம் மீண்டும் வகுப்புவாதப் பேய் தலைதூக்க விட்டு விடமாட்டாது'. என என்டுங்கமுவாவில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிய மந்திரி திரு. பி. பி. ஜீ. கலுகல்ல குறிப்பிட்டார்.

திரு. கலுகல்ல மேலும் பேசியதாவது:-

திரு. கே. எம். பி. ராஜரத்ன போன்றவர்கள் இலங்கையின் முன்னேற்றத்துக்கு எப்பொழுதும் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறார்கள். இவர்கள் வகுப்புவாத பிரசாரத்தினல் மக்களைத் தவருன வழியில் இட்டுச்செல்ல முடியாது.

அபிமானதலைவரான திரு எஸ். டபிள்யு. ஆர். டி பண்டார நாயகாவை பிற்போக்குவாதிகள் இவ்வுலகிலிருந்து இல்லாது செய்து விட்டாலும் தற்போதுள்ள அரசாங்கம் அவரது கொள்கைகளையே எப்போதும் பின்பற்றி வரும்.

இலங்கை 1948-ம் வருடம் சுதந்திரம் பெற்றுலும் 1956-க்குப் பின்னரே சாதாரண மனிதன் சமுதாயத்தில் உரிய இடத்தைப் பெற்றான். யு.என். பி. முதலாளி வர்க்கத்தினரின் நலன்களைப் பாதுகாத்தது. ஆனல் எமது அரசாங்கம் சாதாரண மக்களின் நலன் குறித்தே பாடுபட்டு வருகிறது.

காஷ்மீர்

---

## காலஞ்சென்ற பிரதமர் பெயரில் வார்டு திறப்பு

கொழும்பு, செவ்வாய்

புதிதாக நிறுவப்பட்டதான, அரசாங்கப் பயிற்சி பெற்ற கங்காணிமார்கள், தாதிகள் சங்கத்தின் மூவரடங்கிய தூது கோஷ்டி ஒன்று, சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜெயசூரியாவைச் சந்தித்து காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ஞாபகார்த்தமான பெரியாஸ்பத்திரியில் ஒரு வார்டைத் திறக்குமாறு கேட்டுக் கொண்டது.

இந்த யோசனையை மந்திரி ஏற்றுக்கொண்டார். காலஞ்சென்ற பிரதமர் தமது 60 வது வயதில் காலமானதால் 60 படுக்கைகள் அடங்கிய ஒரு வார்டை ஏற்படுத்த வெண்டுமென சங்கம் திட்டமிடுகிறது. இதற்கான நிதி திரட்டும் ஏறபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


### 8வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 11 திரைகளில்

சிந்தனையைத் தூண்டும் சிறந்த கதை!
உள்ளத்தை உவகையூட்டும் உயர்ந்த பாடல்கள்!
தியாகம்! ஏக்கம்!! இலட்சியம்!!!
அத்தனையும் அமைந்த அற்புத திரை ஓவியம்
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி
எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி,
நடித்த

## பாலும் பழமும்

எமது அடுத்த திரை விருந்து!
எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி,
நடித்த
'குமுதம்'

மனோஹரா (யாழ்ப்பாணம்) என். டி. ராமராவ், ராஜசுலோசன
நடித்த
ராஜமகுடம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.